ISSN 1391-9504


# விஜய்

Vijey விஜய்

23.09.2015 - மலர் 12, இதழ் 30



ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்



'சிலுவை யுத்தம்' என்றால் என்ன..?



'டைனோசர்கள்' பற்றி அறிந்ததும் அறியாததும்

விலை ரூபா 15/-



உலகிலேயே குள்ளமானவரின் மரணம்



யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரி

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUPLIC LIBRAR



1. இங்குள்ளவற்றில் மரங்களில் ஏறக்கூடியவை எவை?

........................................

2. நீர்யானைக்கும் குரங்கிற்கும் பின்னால் இருப்பது எது?

........................................

3. 'காட்டின் ராஜா' என்று பொதுவாக கூறப்படுவது எது?

........................................




இங்குள்ள படங்களை அவதானித்து, அவற்றுக்கேற்ப அட்டவணைப் படுத்துக.




| Person | Things | Places | Animals |
|---|---|---|---|
| (a)______ | (a)______ | (a)______ | (a)______ |
| (b)______ | (b)______ | (b)______ | (b)______ |
| (c)______ | (c)______ | (c)______ | (c)______ |



1. சிறுமி குடை பிடித்துச் செல்லும் இந்தக் காலம்;

   1. வெயில் காலம் 2. மழைக்காலம்
   3. கோடை காலம்

2. நீர் நிரம்பிய கிடங்கில் சிறுமி காலை வைத்ததும், அங்கிருந்து வெளியே பாய்ந்த பிராணிகள் எவை?

   ........................................

3. சிறுமி என்ன நிறங்களினாலான ஆடையை அணிந்திருக்கின்றாள்?

   ........................................

4. குடையின் பயன்கள் 3 தருக.

   ........................................

   ........................................

   ........................................

வினாவுக்கு விடையும், விடைக்கு வினாவும் எழுதுக.

1. கறுப்பு நிற தலைமுடியைக் கொண்டவர்கள் யாவர்?

   ........................................

2. ........................................?

   லியனின் சட்டையின் நிறம் செம்மஞ்சள்.




3. இளஞ்சிவப்பு நிற சப்பாத்தும் வெள்ளை நிற காலுறையும் அணிந்திருப்பவர் யார்?

   ........................................

4. ........................................?


   சாம்பல் நிற காற்சட்டை அணிந்துள்ளான்.

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# செயற்கை குளிரூட்டப்பட்ட நகரம் டுபாயில் தயாராகி வருகின்றது...



உலகிலேயே மிகப் பெரிய கட்டடத்தைக் கொண்ட நகரம் என்ற உலக சாதனையை தனதாக்கிக்கொண்டுள்ள டுபாய் நகரமானது, தற்போது மீண்டுமொரு சாதனைக்கு தயாராகி வருகின்றது. அதாவது, உலகிலேயே மிகப் பெரிய வணிக கட்டடத் தொகுதிகளைக் கொண்ட கட்டமைப்பொன்றை அமைக்கும் பணியில் டுபாய் இறங்கியுள்ளது. இதிலுள்ள சிறப்பம்சம் என்ன தெரியுமா? அதாவது, இந்த கட்டடத் தொகுதியுள்ள பகுதிகளில் வெப்பத்தைத் தணிக்கக்கூடிய குளிர்சாதன குழாய் அமைப்பு முறையொன்று அமைக்கப் பட்டுள்ளமையாகும். மேலும் உலகிலேயே விசாலமான உள்ளக களிப்பூட்டல் பூங்கா, ஹோட்டல், 900 வரையான மாடிவீடுகள் ஆகியன இந்த கட்டடத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த கட்டமைப்பினை 'வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் நகரம்' என்று டுபாய் அரசாங்கம் அறிமுகப்படுத்துகின்றது.







அதாவது, கட்டடத் தொகுதியுள்ள முழு நகரப் பூமியும் குளிரூட்டப் பட்டுள்ளமையாலேயே இவ்வாறு அழைக்கப்படுகின்றது. 48 மில்லியன் சதுர அடி நிலப்பரப்பில் கட்டப்படவுள்ள இந்த கட்டடத் தொகுதி, 'மோல் ஒஃப் த வேர்ல்ட்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு மருத்துவமனைகள், நாடக அரங்கங்கள், நான்கரை மைல் தூர அளவிற்கு வீதியோரக் கடைகள் ஆகியனவும் அமைக்கப்படவுள்ளதுடன், உஷ்ண காலப்பகுதிகளில் டுபாயின் வெப்பநிலையானது 50 பாகை செல்ஸியஸ் அளவிற்கு உயர்வடையும்போது, இந்த கட்டடத் தொகுதியில் அந்த வெப்பத்தின் தாக்கம் இருக்காது என்றும் கூறப்படுகின்றது. காரணம், இப்பகுதி முழுவதும் செயற்கையான குளிர்ச்சியான காலநிலையே நிலவும் என்பதனாலாகும். இதன் காரணமாக, உல்லாசப் பிரயாணிகளை கவரக்கூடிய இடமாக இது அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த குளிர்ச்சிமிகு கட்டடத் தொகுதியில் அமைக்கப்படவுள்ள வர்த்தக கட்டடத் தொகுதி மாத்திரம் 8 மில்லியன் சதுர அடி விஸ்தீரணத்தைக் கொண்டதாக இருக்கும். அதற்கு மேல்புறமாக கண்ணாடி இழையங்களினால் முழுமையாக மறைக்கப்பட்டிருக்கும். குளிர்ச்சியான காலநிலை நிலவும் காலங்களில் இந்த கண்ணாடி இழை திறக்கப்படும். இதன்மூலம் இயற்கை சுற்றுச் சூழலை அனுபவித்தவாறு உல்லாசப் பிரயாணிகள் இங்கு நடமாடக்கூடியதாக இருக்கும். இந்த கட்டடத் தொகுதி அமைக்கப்பட்ட பின்னர், உலகம் முழுவதும் இருந்து வருடமொன்றிற்கு 180 மில்லியன் உல்லாசப் பிரயாணி கள் இங்கு வருகை தருவர் என்றும் கணிப்பிடப் பட்டுள்ளது.



# உலகின் குள்ளமான மனிதர் மரணம்

உலகிலேயே மிகவும் குள்ளமான மனிதர் சில தினங்களுக்கு முன்னர் மரணமானார். நேபாள நாட்டைச் சேர்ந்த டான்ஜி என்ற பெயரைக் கொண்ட இவரது உயரம் 21.5 அங்குலம் ஆகும். உலகிலேயே மிகவும் குள்ளமான மனிதராக 2012 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இவரது பெயர் பதியப்பட்டிருந்தது.

உருவில் குள்ளமான டான்ஜி 'சேர்க்கஸ்' நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மக்களை மகிழ்வித்து வந்தார். ஏற்கனவே, இவர் சுகவீனமான நிலையில் இருந்தபோதிலும், சில தினங்களுக்கு முன்னர் 'சேர்க்கஸ்' கண்காட்சி நிகழ்ச்சியொன்றிற்காக 7,500 கிலோ மீற்றர் தூரம் பயணித்து அமெரிக்காவை வந்தடைந்த பின்னர் அவரது சுகயீன நிலை மேலும் அதிகரித்தது. இதனையடுத்து, அமெரிக்காவிலுள்ள மருத்துவமனையொன்றில் அவர் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும், நியூமோனியா காய்ச்சலின் காரணமாக, சிகிச்சை பலனின்றி அவர் அங்கு உயிரிழந்தார்.

டான்ஜியின் ஐந்து சகோதரர்களில் மூன்றுபேர் உயரத்தில் 4 அடிக்கும் குறைவானவர்களே... மிகுதி இரண்டு பேரும் சாதாரண உயரம் கொண்டவர்களாவர்.







கடந்த இதழில் (செப்டெம்பர் 16) நெக்டோ பென்ச்சாவின் கதை -06 இல் பிரசுரமாகியுள்ள கேள்வி தவறானதாகும்.

**கதை -06 இற்கான சரியான கேள்வி:**
**ஐஃபள் கோபுரம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?**

**விடை அனுப்ப வேண்டிய முகவரி:**

நெக்டோ மாதாந்தக் கேள்வி இல -06
குரூப் எம்-மீடியா,
14/14A, வஜிர வீதி, கொழும்பு-03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புள்ளிமான்

ஒரு காட்டில் ஒரு புள்ளிமான், சிறு முயல், நரி மூன்றும் நண்பர்களாக இருந்தன. ஒரு சமயம் புள்ளிமானைப் பார்ப்பதற்காக, அதன் உறவினரான புள்ளிமான் ஒன்று வேறு ஒரு காட்டிலிருந்து வந்துகொண்டிருந்தது. அதை தற்செயலாக சிறுத்தை ஒன்று பார்த்தது. அதன் நாக்கில் எச்சில் ஊறியது. உடனே அது புள்ளிமானுக்குத் தெரியாமல் பின்தொடர்ந்து சென்று, அது எதிர்பாராத சமயத்தில், அதை அடித்து வீழ்த்தி சுவைத்துத் தின்றது. இதை அக்காட்டில் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு மரங்கொத்திப் பறவை பார்த்துவிட்டது. உடனே அது விரைந்துசென்று புள்ளிமானிடம் ''உன்னுடைய உறவுக்காரப் புள்ளிமான் ஒன்று உன் பெயரைக் கூறி, உன் இருப்பிடத்திற்கு எப்படிப் போக வேண்டும் என்று என்னிடம் வழி கேட்டது. நான் வழியைக் கூறி அனுப்பினேன். ஆனால், உன்னுடைய எதிரியான அந்தச் சிறுத்தை அந்த மானைப் பிடித்து கொன்று உண்டுவிட்டது. அந்தச் சிறுத்தை இப்படிச் செய்யும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அது உனக்கு மட்டுமல்ல, இங்குள்ள ஏனைய சிறிய விலங்குகளுக்கும் கூட தீமையே செய்து வருகிறது. அதை எப்படியாவது ஒழித்துக்கட்டும் வேலையைப் பார். இல்லாவிட்டால் உன் குடும்பத்தைக்கூட என்றாவது ஒருநாள் கொன்றுவிடும்!'' என்று கூறிவிட்டுப் பறந்து சென்றது.

மானும், தன் நண்பனான நரியிடம் சென்றது. மரங்கொத்திப் பறவை கூறியதை கூறியதுடன் ''அவ்வளவு பெரிய சிறுத்தையை நம்மால் எப்படித் தீர்த்துக் கட்ட முடியும்?'' என்றும் நரியிடம் கேட்டது. நரி பலத்த யோசனையில் ஆழ்ந்தது.பின்னர் ''நான் சொல்கிறபடி செய், நாம் அனைவரும் நலமாக இருக்கலாம். அந்தச் சிறுத்தையையும் ஒழித்துக் கட்டலாம்!'' என்று கூறியது. பின், மானின் காதோடு காதாக அந்த ரகசியத்தைக் கூறவே மான் மகிழ்ச்சியடைந்தது. மறுநாள் சிறுத்தையை சந்தித்த நரி ''காதில் கேட்ட ஒரு விடயத்தை உன்னிடம் கூறிவிட்டுப் போகலாம் என்று வந்தேன். உனக்குப் பெரிய ஆபத்து காத்திருக்கிறது!'' என்றது. சிறுத்தையும் ''எனக்கா, ஆபத்தா? யாரிடமிருந்து? என்னை மிஞ்சியவன் இந்தக் காட்டில் இருக்கிறானா?'' என்று அலட்சியமாகக் கூறிச் சிரித்தது. ''சரி, அப்படியானால் நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தது நரி.

''நில்... சொல்ல வந்த விடயத்தைக் கூறிவிட்டுப் போ!'' என்று கூறியது சிறுத்தை. ''புள்ளி மானைத் தேடி அதன் உறவுக்காரப் புள்ளிமான் ஒன்று நேற்று இங்கே வந்திருக்கிறது. வரும்போது மரங்கொத்திப் பறவை ஒன்றிடம் புள்ளிமான் விலாசத்தைக் கூறி விசாரித்திருக்கிறது. அதுவும் விலாசத்தைச் சொல்லிவிட்டு சென்றிருக்கிறது. ஆனால், அது வரும் வழியில், நீ அதை மடக்கிக் கொன்று தின்று விட்டாய்.



ஆகையினால் புள்ளிமான்கள் உன்மேல் கோபமாக உள்ளன. அவை உன்னை அழித்தே தீர வேண்டும் என்று சதியாலோசனையில் ஈடுபட்டு வருகின்றன.

நீயும் அசைவம், நானும் அசைவம் என்ற இனப்பற்றால் சொல்ல வந்தேன். நீயோ வர இருக்கும் ஆபத்தை அறியாமல் வீர வசனம் பேசிக்கொண்டிருக்கிறாய். எனக்கென்ன சொல்லுவதைச் சொல்லிவிட்டேன். இனி அடுத்துச் செய்ய வேண்டிய பொறுப்பு உன்னுடையது'' என்றது நரி. திடுக்கிட்டுப் போன சிறுத்தை ''இவ்வளவு விவரத்தைச் சொன்ன நீ அவை எங்கே சதியாலோசனை நடத்துகின்றன என்பதையும் சொல்லேன்'' என்று கெஞ்சும் குரலில் கேட்டது. நரி சிந்தனை செய்துவிட்டு ''சரி என்னுடன் வா, நான் கூட்டிக்கொண்டு போகிறேன். ஆனால், நான்தான் காட்டிக்கொடுத்தேன் என்று நீ சொல்லிவிடக்கூடாது'' என்றது.

காட்டின் நடுவில் ஒரு சின்னக் குன்றும், குகைப் பகுதியும் இருந்தன. அதன் முன்னிலையில் மைதானம் போன்ற மணல் பரப்பு இருந்தது. அந்தக் குகையின் வெளிப்பக்கம் பார்த்தவாறு புள்ளிமானும், புள்ளிமான் குடும்பமும் பேசிக்கொண்டிருந்தன. நரி ஓரத்தில் மறைந்து நின்று அக்காட்சியை சிறுத்தைக்குக் காட்டியது. அதைப் பார்த்த சிறுத்தைக்கு நாவில் எச்சில் ஊறியது.

''ஆஹா ஒரே நேரத்தில் எத்தனை மிருகங்கள். அத்தனையையும் அடித்துக் கொன்று விடுவோம். அத்துடன், ஒரு மாதத்துக்கு சாப்பாட்டுக்குக் கவலையில்லை!'' என்று நினைத்து, சிறுத்தை பதுங்கிப் பதுங்கிச் சென்று அங்கிருந்த மணல் பகுதிக்குள் நுழைந்தது. அது மிக ஆபத்தான மணல் பகுதி என்பதை சிறுத்தை அறியவில்லை. திடீரென மணல் மேடு சரிந்து சிறுத்தைமேல் விழ அது மணலின் உள்ளே புதைந்து இறந்து போனது. தமது திட்டம் பலித்ததை இட்டு நரியும் புள்ளிமானும் மகிழ்வடைந்தன.

# சிங்கமும் சிலையும்

ஒருநாள் ராமு தன்னுடைய சிங்கத்தை அழைத்துக்கொண்டு காட்டுப்பகுதிக்கு தேன் எடுப்பதற்காக சென்றுகொண்டிருந்தான். செல்லும் வழியில் தங்களில் யார் அதிக வீரமுள்ளவர்கள் என்பதைப்பற்றி சிங்கமும் ராமுவும் பேசிக்கொண்டு சென்றனர்.

அப்போது செல்லும் வழியில் 'ஒரு மனிதன் சிங்கத்தைக் கீழே தள்ளி அதன்மீது நிற்பதைப்போல' ஒரு சிலை அமைந்திருந்தது. ''இதைப் பார்த்தாயா சிங்கமே? யாருக்கு அதிக வீரம் இருக்கிறது என்பது இதில் இருந்தே தெரிகிறது அல்லவா?'' என்றான் ராமு. ''ஓ, இது மனிதன் செய்த சிலை, ஒரு சிங்கம் அந்த சிலையை செய்திருந்தால், மனிதனைக் கீழே தள்ளி அவன்மீது, தான் நிற்பது போலச் செய்திருக்கும்'' என்று கூறியது சிங்கம். சிங்கத்தின் பதிலைக் கேட்டு ராமு வாயடைத்துப் போனான்.



# கோபம்

ஒரு சீடன் தன் குருவிடம் ''என்னால் எனது கோப இயல்பைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை நான் என்ன செய்வது?'' என்று கேட்டான்.

குரு அவனிடம், ''உனது கோபம் எங்கே அதை எனக்குக் கொஞ்சம் காட்டு'' என்றார். சீடன் ஆச்சரியப்பட்டான். ''இப்போதைக்கு என்னிடம் கோபம் இல்லை. அதனால், என்னால் அதைக் காட்ட முடியாது'' என்றான். ''சரி பிரச்சினை ஒன்றும் இல்லை. ஆனால், கோபம் வரும்போது அதை என்னிடம் கொண்டுவந்து காட்டு'' என்றார் குரு. ''கோபம் வந்தவுடன் என்னால் கொண்டுவந்து எப்படிக் காட்டுவது? எதிர்பாராத வேளையில்தான் கோபம் வரும். அதை நான் உங்களிடம் வந்து காட்டுவதற்குள் நிச்சயமாக அது மறைந்தே போய்விடும்'' என்றான் சீடன்.



அப்படியானால், கோபம் என்பது உனது உண்மையான இயல்பாக இருக்க முடியாது. என்றார் குரு. ''கோபம் உனது உண்மையான இயல்பாக இருக்கும் எனில் எந்தச் சமயத்திலும் என்னிடம் அதைக் கொண்டுவந்து காட்ட முடியும். நீ பிறக்கும்போது உன்னிடம் அது இல்லை. உனது பெற்றோரும் அதை உன்னிடம் தரவில்லை. அதனால், அது வெளியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். எப்போதெல்லாம் கோபம் வருகிறதோ அதை உன் மனதில் இருந்து விரட்டி அடித்துவிடு'' என்றார் குரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில வேம்பு



அம்பாறை ஆகிய பகுதிகளில் இத்தாவரங்களை காண முடியும்.

நில வேம்பு மிகவும் பெறுமதி வாய்ந்த மருத்துவக் குணம் மிக்க தாவர இனமாகும். இதனாலேயே, அழிந்துவரும் அபாயத்தினை இந்த தாவரம் எதிர்நோக்கியுள்ளது. மிகவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இயற்கை வனாந்தரங்களில் நில வேம்பு தாவரத்தினை சேகரிப்பது சட்ட விரோத செயலாகும்.

தாவரவியல் பெயர்: *Munronia Pinnata*

இலங்கையிலும் இதர ஆசிய நாடுகளிலும் வளரும் உள்நாட்டு தாவரமாகும். 65 செ.மீற்றர் உயரம்வரை வளரக் கூடியது. வனாந்தரம் மற்றும் மலை சார்ந்த அடர்ந்த காடுகளில் இத்தாவர இனத்தைக் காணலாம். இலங்கையில் ரிட்டிகல, தொலுகந்த, லக்கல, வெல்லவாய, புத்தல, மொனராகல,



# பயிர்களுக்கு சாதகமான பசுமைக் கூடாரம்

பயிர்களுக்கு சாதகமான சுற்றுப்புறச் சூழலை வழங்குவதே, 'பசுமைக் கூடார தொழில்நுட்பம்' ஆகும். பசுமைக் கூடாரம் என்பது, ஒளி ஊடுருவக்கூடிய அல்லது பிளாஸ்டிக் கூரையினால் போர்த்தப்பட்ட ஓர் அமைப்பினையே குறிக்கின்றது. பலத்த காற்று, குளிர், பலத்த மழை, அதிக சூரிய ஒளி, அதிக வெப்பநிலை, பூச்சித் தொற்றுகள் என்பனவற்றிலிருந்து செடிகளைப் பாதுகாக்க இந்த அமைப்பிலான பயிர்ச்செய்கை மிகவும் உதவியாக உள்ளது.

பசுமைக் கூடாரத்தினுள் பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சலுக்குத் தேவையான தட்ப வெப்பநிலை எளிதில் கிடைக்கும். காபனீரொக்சைட் வாயு கூடாரத்தின் உட்புறத்திலேயே தங்கி விடுவதால், தாவரத்தின் ஒளிச்சேர்க்கைக்கு அதிகளவில் காபனீரொக்சைட் வாயு கிடைக்கிறது. இதன்மூலம் பயிர்களில் 5 முதல் 10 மடங்கு அதிக ஒளிச்சேர்க்கை நடைபெற வாய்ப்புக் கிடைக்கின்றது. இதன் காரணமாக அதிகளவு விளைச்சலையும் தரமான விளைச்சலையும் பெறக்கூடியதாக இருக்கும்.

மேலும், மண்ணிலிருந்து ஆவியாகும் நீரும் உட்புறத்திலேயே தங்கிவிடுவதால், சுற்றுப்புற ஈரப்பதமும் மண்ணின் ஈரப்பதமும் அதிகமாகிறது. இதனால், இந்த முறையில் பயிர் செய்வதற்கு குறைந்த நீர்ப்பாசனமே தேவைப்படுகின்றது. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கக்கூடிய பிராணிகளின் தாக்குதலிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கவும் இந்த முறை உதவுகின்றது.

# மின்சாரம் எவ்வளவு விரயமாகின்றது?



அன்றாடம் நாம் பலவிதமான மின் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றோம். அந்த உபகரணங்களைப் பயன்படுத்தும்போது எவ்வளவு மின்சாரம் விரயமாகின்றது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தாலும்கூட, அது பற்றி நாம் அக்கறை காட்டுவதில்லை. எனினும், இத்தகைய மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதனால், மின்சாரம் எவ்வளவு விரயமாகின்றது என்பது குறித்து அறிந்து வைத்துக்கொள்வதனூடாக மின்சாரத்தினை சிக்கனமாகப் பயன்படுத்த முடியும். ஆகவே, நாம் வீட்டில் அன்றாடம் பயன்படுத்துகின்ற சில மின் உபகரணங்களினால் எவ்வளவு மின்சாரம் விரயமாகின்றது என இங்கு பார்ப்போம்.

| | வொட் அளவு | நாளாந்தம் பயன்படுத்தும் மணித்தியால அளவு | மாதாந்தம் விரயமாகும் அலகு |
|---|---|---|---|
| சாதாரண மின்குமிழ் | 75 | 4 | 9 |
| டியூப் லைட் (Tube light) | 40 | 4 | 5 |
| CFL மின்குமிழ் | 15 | 4 | 2 |
| LED மின்குமிழ் | 5 | 4 | 0.6 |
| வர்ணத் தொலைக்காட்சி | 100 | 4 | 12 |
| வானொலி | 40 | 4 | 4.8 |
| கணினி | 80-150 | 4 | 9.6-18 |
| மின் கேத்தல் | 1500 | 1/2 | 23 |
| ரைஸ் குக்கர் | 600 | 1/2 | 9 |
| மின் அடுப்பு | 4000 | 1 1/2 | 180 |
| குளிர்சாதனப்பெட்டி | 130 | 15 | 58 |
| மேசை மின்விசிறி | 40 | 8 | 10 |
| சீலிங் மின்விசிறி | 75 | 8 | 18 |
| சலவை இயந்திரம் | 1500 | 1/4 | 11 |
| மின் அழுத்தி | 750 | 1/3 | 7-8 |






மின்சாரத்தை சேமிப்போம்-
சோலார் பெனல்களை
வென்றிடுவோம் விஜய்

வாராந்தம் வினாவுக்கு விடையளித்து
Lanka GlobalLifestyle
வழங்கும் ரூ. 55,000 மதிப்புள்ள
சோலார் பெனலொன்றை வென்றிடுங்கள்

Lanka GlobalLifestyle

**இவ்வார வினா:**
வீட்டில் வெளிச்சத்தைப் பெறுவதற்கு மிகவும் உகந்த மின்குமிழ் ரகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.



விடையை தபாலட்டையில் மாத்திரம் எழுதி, 02.10.2015 இற்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மின்சாரத்தை சேமிப்போம் -
சோலார் பெனல்களை
வென்றிடுவோம் வினா - 7,
விஜய்,
த.பெ.இல. 2037, கொழும்பு.

| சோலார் பெனல் வெல்பவர் | போட்டி இல - 5 இன் வெற்றியாளர் | சு.ஹர்சவர்தன், 176/10, ஜெம்பட்டா தெரு, கொழும்பு-13. |
|---|---|---|

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை யுத்த

முன்னைய காலத்தில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர் யுத்தமே சிலுவை யுத்தம் எனப்படுகின்றது. அக்கால கட்டத்தில் கிறிஸ்தவ பக்தர்கள் வழிபாட்டிற்குச் செல்லும் ஜெருசலேம் உள்ளிட்ட சில இடங்கள் இருந்தன. அவ்விடங்களை புனித பூமி என அவர்கள் அழைத்தனர். பின்னர் அப்பிரதேசங்கள் இஸ்லாமியர்களின் ஆளுகைக்கு உட்பட்டது. இதனால், இந்த புனித பூமியை சொந்தமாக்கிக்கொள்வதற்காக நான்கு சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டன. அந்த யுத்தங்களையே சிலுவை யுத்தம் என அழைப்பர்.

## முதலாவது சிலுவை யுத்தத்திற்கான பின்புலம்

ஜெருசலேம் என்பது கிறிஸ்தவ சமயத்தவர்களின் பரிசுத்த வணக்கத் தலமாகும். அது இயேசு கிறிஸ்து பிறந்து, வாழ்ந்த இடமாக கருதப்படுகின்றது. இதனால், உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இந்த புனித பூமியை வணங்குவதற்காக வருகை தந்தனர். பதினோராம் நூற்றாண்டில் ஜெருசலேமின் ஆட்சி அதிகாரத்தை துருக்கியர்கள் அல்லது இஸ்லாமியர்கள் கைப்பற்றினர். அவர்களின் ஆட்சியின்கீழும் கிறிஸ்தவர்களுக்கு புனித பூமியை வணங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அது நீண்ட காலம் நீடிக்கவில்லை. இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களை அடிக்கடி தாக்க ஆரம்பித்தனர். கிறிஸ்தவ பக்தர்களை கொலை செய்தனர். இத்தகைய நிலையில் அக்காலத்தில் பாப்பரசராக இருந்த இரண்டாம் அர்பன் பாப்பரசர் இஸ்லாமியர்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார். அவர் யுத்தமொன்றுக்கு அணி திரளுமாறு ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அவரின் நோக்கம் இஸ்லாமியரான துருக்கியரிடம் இருந்து ஜெருசலேமை விடுவிக்க வேண்டும் என்பதாகும். அந்த யுத்தமே 'முதலாவது சிலுவை யுத்தம் அல்லது புனித யுத்தம்' (புனிதப் போர்) என அழைக்கப்படுகின்றது.

## முதலாவது சிலுவை யுத்தத்திற்கு ஆயத்தம்

பாப்பரசர் அர்பன் அவர்களின் வேண்டுகோளின்படி ஒன்று திரண்ட கிறிஸ்தவர்களிடையே தேவாலய அதிகாரிகள், பிரபுக்கள் போன்ற உயர் அந்தஸ்துள்ளவர்கள் உட்பட தாழ்த்தப்பட்ட சாதியினரும் அடங்கியிருந்தனர். அவர்கள் அந்த யுத்தத்தில் மிகவும் ஆர்வத்துடனும் துணிவுடனும் பங்குபற்றினர். பாப்பரசர் தனது செய்தியில், இந்த யுத்தத்தில் பங்குபற்றுவோரின் பாவங்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்றும் அவர்களின் சொத்துக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். அத்தோடு, யுத்தத்தில் இறப்பவர்கள் நித்திய மோட்ச இராச்சியத்தை அடைவார்கள் என்றும் அறிவித்திருந்தார்.

## முதலாவது சிலுவை யுத்தம் (கி.பி. 1096-1099)

முதலாவது சிலுவை யுத்தத்தில் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். எனினும், அவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் போதியளவு இருக்கவில்லை. உணவும் பானமும்கூட சரியாக கிடைக்கவில்லை. இதனால், பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. பலர் மரணத்தை தழுவினர். எனினும், தரைவழியாகவும் கடல் மார்க்கமாகவும் சென்றவர்கள் எதிரிகளுக்கு அஞ்சாது முகம் கொடுத்தனர். அவர்கள் கடுமையான யுத்தத்தின் பின்னர் அன்டியொக் நகரையும் ஜெருசலேம் பிரதேசத்தையும் கைப்பற்றினர். அதுமட்டுமல்ல அவற்றிற்கு அருகில் உள்ள பிரதேசங்களையும் கைப்பற்றி தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்தின் கதை

## இரண்டாவது சிலுவை யுத்தம் (கி.பி. 1147-1149)



முதலாவது யுத்தத்தில் பெருவெற்றி அடைந்த கிறிஸ்தவர்களிடையே நாளடைவில் கருத்து மோதல்கள் ஏற்பட்டன. இந்த ஒற்றுமையின்மையை இஸ்லாமியர்கள் அறிந்திருந்தனர். அதில் பயனடைந்த இஸ்லாமியர்கள் கி.பி 1144 இல் கிறிஸ்தவ சமயத்தவர்களின் மிகவும் முக்கியமான இடமாகவும் மத்திய நிலையமாகவும் கருதப்பட்ட ஏடெஸ்ஸாவை கைப்பற்றினர். இதனால், அக்காலத்தில் பாப்பரசராக இருந்த மூன்றாம் எவுஜின் பாப்பரசர் அவர்கள் இரண்டாம் சிலுவை யுத்தத்திற்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டார். எனினும், கை நழுவிய அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற கிறிஸ்தவர்களால் முடியவில்லை. கிறிஸ்தவர்கள் பின்வாங்கியதால் இஸ்லாமியர்கள் மீண்டும் ஜெருசலேமின் அதிகாரத்தை தம் வசமாக்கினர். இந்த யுத்தத்தில் முக்கிய பங்கெடுத்து முன்னணி வகித்துச் செயல்பட்டவர் செலடின் பேரரசனாவார். மேற்கு ஆசியாவின் சகல இஸ்லாமியர்களையும் ஒன்றிணைத்தவர் என்ற ரீதியில் இவர் வரலாற்றில் புகழ்பெறுகின்றார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவை யுத்தத்தின் கதை

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மூன்றாவது சிலுவை யுத்தம் (கி.பி 1189-1191)

ஜெருசலேமின் ஆட்சி அதிகாரத்தை இழந்தமை மேற்குலக கிறிஸ்தவர்களுக்கு பெரும் அடியாகும். அது மூன்றாவது சிலுவை யுத்தத்திற்கு வழிவகுத்தது. அப்பொழுது ஐரோப்பாவில் ஆட்சிபுரிந்த புகழ்பெற்ற சில மன்னர்கள் செலடின் பேரரசனுடன் யுத்தம் செய்யத் தயாராயினர். எனினும், யுத்தம் புரிய வந்த மன்னர்கள் தமக்கிடையே மோதிக்கொண்டனர். அந்த மோதல்களின் பிரதிபலனாக இறுதியில் ஒரே ஒரு மன்னன் மாத்திரமே எஞ்சியிருந்தான். அவன் தனது குழுவினருடன் பல பிரதேசங்களை கைப்பற்றினான். எனினும், செலடின் பேரரசனை தோற்கடித்து ஜெருசலேமை கைப்பற்ற அவனால் முடியவில்லை. இந்த மன்னனின் மிகச் சிறந்த குணாம்சங்களை அறிந்துகொண்ட பேரரசன் செலடின் அந்த கிறிஸ்தவ மன்னனுடன் உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டான். அதன்படி கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலேமில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கினான்.

## நான்காவது சிலுவை யுத்தம் (கி.பி 1202 - 1204)

இந்த யுத்தத்திலும் திருப்தி அடையாத இன்னசண்டா எனும் பாப்பரசர் இஸ்லாமியர்களின் ஆதிக்கத்தில் இருந்து ஜெருசலேமை காப்பதற்காக யுத்தம் புரியும்படி கிறிஸ்தவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி சிலுவை யுத்த வீரர்கள் கொன்ஸ்தாந்திநோபிள் வரை கப்பல் வழியாக முன்னேறிச் சென்ற பொழுதிலும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாமல் பின்வாங்கினர். அவர்களில் பெரும்பான்மையோர் இஸ்லாமியருடன் யுத்தம் புரிவதை விடுத்து கிறிஸ்தவர்களாகிய தமக்குள்ளேயே மோதினர். அத்தகைய நிகழ்வுகள் கிறிஸ்தவர்களுக்கு வரலாற்று ரீதியாக கலங்கத்தை ஏற்படுத்தியது.



## சிறுவர்களின் சிலுவை யுத்தம்


நான்காம் சிலுவை யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியால் பெற்ற கசப்பான அனுபவத்தால் பின்னடைவில் இருந்த கிறிஸ்தவர்கள் தமது அடுத்த தந்திரோபாயமாக சிறுவர்களை பயன்படுத்தினர். 'முப்பதாயிரம் சிறுவர்களை (நடை பவனியில்) பாதயாத்திரை மூலம் மத்திய தரைக்கடல் வரை பயணிக்கச் செய்தனர். இவர்களில் பெரும்பாலானோர் உணவுத் தட்டுப்பாடு காரணமாகவும் நோய்களின் காரணமாகவும் மரணித்தனர். எஞ்சியோர் இஸ்லாமியரிடம் பிடிபட்டு அடிமைகளாக விற்கப்பட்டனர்.



## சிலுவை யுத்தங்களின் பெறுபேறு

பலமுறை முயற்சித்தபொழுதிலும் புனித பூமியை (பரிசுத்த பூமி) மீட்கும் போர்கள் அனைத்தும் பயனற்றுப் போயின. எனினும், அதனால் கிடைத்த நல்ல பெறுபேறுகள் அல்லது நற்பயன்களோ ஏராளம். அதாவது, ஐரோப்பாவின் மத்திய கால வாழ்க்கை முறை மாற்றமடைந்தன. கீழைத்தேய நாடுகளில் நிகழ்ந்த முன்னேற்றகரமான நாகரிகங்கள், புதிய சிந்தனைகள் மற்றும் செயற்றிட்டங்கள் அனைத்தும் கிறிஸ்தவர்களால் ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்டன.

பட்டு, சீனி, மருந்து வகைகள், வாசனைத் திரவியங்கள், விலை மதிப்பான கற்கள், கண்ணாடி உள்ளிட்ட கீழைத்தேய உற்பத்திப் பொருட்கள் பலவற்றை ஐரோப்பாவிற்கு கொண்டு சென்றனர். வர்த்தகப் பொருட்களுக்கு ஐரோப்பாவில் கேள்விகள் அதிகரிக்கவே கீழைத்தேய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டன. மேலைத்தேய கீழைத்தேய நாடுகளிடையே வர்த்தக மத்திய நிலையங்கள் வளர்ச்சி அடைந்தன.



## மானிய முறையின் வீழ்ச்சி

யுத்தத்தில் ஈடுபடுவதற்காக பிரபுக்கள் சிலர் தமது காணிகளை விற்று ஐரோப்பாவிற்கு சென்றனர். வேறு சிலர் போரில் மடிந்தனர். இதனால், பிரபுக்களின் ஆதிக்கம் வீழ்ந்தது. பிரபுக்களின் காணிகளில் சேவை புரிந்த அடிமைகள் விடுதலை அடைந்தனர்.

கீழைத்தேய நாடுகளுடன் ஏற்பட்ட தொடர்புகளின் காரணமாக, கீழைத்தேய நாடுகளில் இருந்த விஞ்ஞான அறிவு, உற்பத்திகள், அராபிய எண்கள், கணித அறிவு போன்றவற்றை மேற்குல மக்களும் கற்றுக்கொண்டனர்.

மற்றொருவகையில் வீழ்ச்சியும்கூட இந்த சிலுவை யுத்தங்களால் ஏற்பட்டது. ஐந்தாம் சிலுவை யுத்தம் வரை பாப்பரசர்கள் சமூகத்தில் உன்னத நிலையில் இருந்து செயல்பட்டாலும் அதன்பின்னர் அவர்கள் வசமிருந்த ஆதிக்கமும் அதிகாரமும் வீழ்ச்சி அடைந்தன.

இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாவனையில் இருந்துவரும் தவறான சொற்பிரயோகங்கள்







ஊடகத்துறை பற்றிய கற்கை நெறிகளின்போது 'News' என்ற சொல் எவ்வாறு உருவானது என்ற கேள்வி எழுப்பப்படுவதுடன், அதற்கான விளக்கங்களும் கொடுக்கப்படுவதுண்டு. அதன்படி, N- North, E- East, W- West, S- South என சகல திசைகளிலும் நடப்பதை சுட்டிக்காட்டும் விதமாக குறித்த திசைகளின் முதல் எழுத்துக்களின் தொகுப்பாகவே News என்ற சொல் உருவாகியதாக குறிப்பிடப்படுவதுண்டு. இருப்பினும், இக்கட்டுரையின் ஊடாக இதற்கு இன்னுமொரு மாற்று விளக்கத்தையும் வழங்க விளைகின்றோம். அதாவது New என்பதே பன்மையாக News என்றாகியது என்றும் கூறலாம்.

எப்படியென்றால், புதியவற்றை தாங்கி வருவதே செய்தி எனப்படுவதால் அந்த புதியதை ஆங்கிலத்தில் New என்றே அர்த்தப்படுத்தலாம். ஆகையால் இந்த New என்ற பதத்துடன் s என்ற எழுத்தையும் சேர்த்து பன்மையாக்கி News என ஆகியதாக அர்த்தப்படுத்தவும் முடியும். வழமையாக கூறப்படுகின்ற விளக்கத்தின்படி North, East, West, South என்பதை எடுத்துக் கொண்டால் இதில் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என எடுத்துக்கொண்டாலும், 'மத்தி (Central) என்பது விடுபட்டுள்ளதையும் அவதானிக்கலாம். ஆக திசைகளின் கூட்டுத் தொகுப்பே News என ஆகியதாக வாதிடுவது பொருந்தாத நிலையில், புதியன (புதிய தகவல்களை) கூறுவதைக் குறிக்கும் New என்பதன் பன்மையாக News என்ற பதம் உருவாகியதாக கொள்வதே பொருத்தமாகும்.

## தவறான சொற்பிரயோகங்கள்

செய்திகளில் சில சந்தர்ப்பங்களில் தவறான சொற்பிரயோகங்கள் இடம்பெறுவதால் சில நேரங்களில் அவை அர்த்தம் மாறுபடுவதுண்டு, இன்னும் சில சந்தர்ப்பங்களில் பொருள் மயக்கத்தையும் தருவதுண்டு. அத்தகைய சில உதாரணங்களை இங்கு பார்ப்போம்.




ரயில் தண்டவாளத்திலிருந்து விலகி விபத்துக்குள்ளாகிய செய்திகளை சில பத்திரிகைகள் பிரசுரிக்கும்போது 'ரயில் தடம்புரண்டது' என்று குறிப்பிடுவதுண்டு. இதனை சற்று பொருள்படும் விதமாக 'ரயில் தடம் விலகியது' என்று குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்கும்.

இன்னுமொரு செய்தியை எடுத்துக்கொண்டால், 'நேற்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது...' என குறிப்பிடப்படுவதுண்டு. எந்தவொரு அணியுமே தோல்வியை எதிர்பார்த்துப் போட்டியிடுவதில்லை. எனவே, 'தோல்வி'இல்லை என்று கூறுவது பொருந்துவதாக இருக்காது. எனவே இந்த வசனத்தை 'எந்த அணிக்கும் வெற்றியின்றி போட்டி முடிவடைந்தது' என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

இதேபோல் மற்றுமொரு செய்தியை நோக்குவோம்... உலக அகதிகள் தினம், சுனாமிதினம், பார்வையற்றோர் தினம் போன்ற செய்திகளை பிரசுரிக்கையில் அத்தினங்கள் 'கொண்டாடப்பட்டது' என்று குறிப்பிடப்படுவதுண்டு. இந்த வார்த்தைப் பிரயோகமும் தவறானதாகும். அதாவது, இத்தகைய தினங்களை கொண்டாடப்பட்டது என்று கூறுவதற்குப் பதிலாக அனுஷ்டிக்கப்பட்டது என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும். கவலைக்குரிய சம்பவங்களை நினைவுகூரும்போது 'கொண்டாட்டம்' என்ற வார்த்தையைவிட அனுஷ்டிப்பு என்ற வார்த்தையே சரியானதாக அமையும்.

இன்னுமொரு உதாரணத்தை எடுத்துக்கொண்டால், 'எதிர்க்கட்சித் தலைவர்' என்று குறிப்பிடுவதைவிட எதிர்க்கட்சிகளின் தலைவர் என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும். அதாவது, ஆளும் கட்சியில் பங்கெடுக்காத கட்சிகள் பல நாடாளுமன்றத்தில் இருக்கலாம். இத்தனை கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவரை (பல) எதிர்க்கட்சிகளின் தலைவர் என்று குறிப்பிட்டால் அதுவே பொருத்தமாக இருக்கும். இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை நுணுக்கமாக ஆராய்ந்து பிரயோகிப்பதில் ஊடகத்துறையினர் அவதானமாக இருந்தால் அவை அர்த்த புஷ்டியானதாக அமையும்.

(தொடரும்)

-ரிஷபன்

வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

09.09.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:
சிக்காகோ
Pen Drive வெற்றியாளர்:
எம்.எஃப்.ஸபானா,
55/1, முந்துவ மாவத்தை,
இரத்தினபுரி.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(23.09.2015)
விஜய
த.பெ.இல 2037
கொழும்பு

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை
Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)
Sponsored:
MY LOOK.LK
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women Clothing Store)

இவ்வார கூப்பன்:
23.09.2015
விடை: ....................
பெயர்: ....................
முகவரி: ....................
தொ.பே.இல: ....................
பாடசாலை: ....................
தரம்: ....................
....................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்


பெயர்: ......................................................

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.


01. கீழுள்ள உருக்களில் அரைவாசிக்கு நிறம் தீட்டப்பட்ட உரு எது?



02. சதுரமுகி வடிவத்தை ஒத்த வடிவம் யாது?



03. கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்கு வர வேண்டிய உருவை தெரிவுசெய்க.



04. 1 தொடக்கம் 20 வரையான எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களைக் கூட்டும்போது கிடைப்பது;

1. ஓர் இரட்டை எண் கிடைக்கும்
2. ஓர் ஒற்றை எண் கிடைக்கும்
3. ஓர் ஒற்றை எண் அல்லது இரட்டை எண் கிடைக்கும்

05. வெற்றுக்கூட்டுக்குள் வர வேண்டிய எண்ணை எழுதுக.

547 → 1094 → 1641 → [ ]

1. 2188 2. 2180 3. 2089

★ **தோட்டமொன்றில் பூத்திருக்கும் பூக்கள் குறித்த தகவல்கள் கீழ்காணும் முறையில் காட்டப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து அடுத்து வரும் இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.**

| | |
|---|---|
| குறைவு ⟶ கூட<br>கூட ⟵ குறைவு | ரோஜா ⟶ மல்லிகை<br>சூரியகாந்தி ⟵ அந்தூரியம் |

06. தோட்டத்தில் அதிகளவில் மலர்ந்துள்ள பூ எது?

1. ரோஜா 2. மல்லிகை 3. அந்தூரியம்

07. தோட்டத்தில் குறைவாக மலர்ந்துள்ள பூ யாது?


1. ரோஜா 2. மல்லிகை 3. அந்தூரியம்

08. சரியான கோவையை தெரிவுசெய்க.

1. 8x0+7+7 = 14 2. 8x0+7+7 = 22
3. 8x0+7+7 = 20

09. பின்வரும் தொடர்பை சரியாக குறித்துக் காட்டும் விடையை தெரிவு செய்க.

✱ பாடம், தமிழ்ப்பாடம், கணித பாடம்



10. ஒரு கிலோ கிராம் ரவையின் விலை ரூபா 80.00 எனின், 100g ரவையின் விலை யாது?

1. ரூபா 8.00 2. ரூபா 12.00 3. ரூபா 10.00




11. உமக்கு 8 வயதாக இருக்கும்போது, உமது தம்பி பிறந்தான். அவனுக்கு இன்று எட்டு வயது எனின், இருவருக்கும் இடையிலான வயது வித்தியாசம் யாது?

1. 4 2. 6 3. 8

★ **தரப்பட்ட தரவுகளை கவனித்து, கீழ்காணும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

ஒரு மாணவி கடைக்குச் சென்று 20 நீலநிறப் பேனாக்களும், அதில் அரைமடங்கு கறுப்பு நிறப் பேனாக்களும், கறுப்பு நிறப் பேனாக்களைவிட எட்டு கூடுதலான சிவப்பு நிறப் பேனாக்களும் வாங்கினாள்.

12. அவள் மொத்தமாக வாங்கிய பேனாக்கள் எத்தனை?


1. 48 2. 32 3. 38

13. அவள் வாங்கிய சிவப்பு நிறப் பேனாக்கள் எத்தனை?

1. 10 2. 2 3. 18

14. அவள் வாங்கிய கறுப்பு நிறப் பேனாவொன்றின் விலை ரூபா 12.00 ஆயின், அவள் கறுப்பு நிறப் பேனா வாங்கச் செலவழித்த பணம் யாது?

1. ரூபா 100 2. ரூபா 120 3. ரூபா 220

15. 

அருகிலுள்ள உருவின் ஒரு சதுரத்தின் பரப்பளவு யாது?

1. $9cm^2$ 2. 9cm 3. $1cm^2$

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### புலமைப்பரிசில் விடைகள் - தமிழ்

(செப்டெம்பர் 16 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

***01)*** *1. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது* *2. கரி, முறம்*
*3. சிறிய பிராணி என்று எண்ணி* *4. பெரியவன்*
*5. கர்வம் கொண்ட யானையின் அலட்சியப் போக்குக்கை மாற்ற*
*6. சுளகு* *7. தலை, காது*

***02)*** *1. காரியங்களில்* *2. நட்சத்திரங்கள்* *3. வளர்ச்சிக்கு*

***03)*** *1. பள்ளம்* *2. சந்து*

***04)*** *1. எறும்பூரக் கற்குழியும்.* *2. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை*

***05.*** *1. அறுபதாவது வருடம் கொண்டாடும் விழா*
*2. மா, பலா, வாழை*
*3. ஒவ்வொரு வருடமும் ஒருவர் பிறந்ததினத்தை கொண்டாடும் விழா*
*4. தேர்தலில் போட்டியிடுபவர்* *5. வளர்ப்புத் தாய்*

***06)*** *1. ஆனந்தம்* *2. சூறாவளி* *3. பிதா*
*4. ஆறு* *5. வாகனம்/வானவில்*

***07)*** *1. நாம்/நரங்கள்* *2. வனம்/காடு* *3. ஆகாயம்/வானம்*
*4. இறந்த காலம்* *5. நல்ல+அறிவு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்க முடியாத பறவை இனம்
# 'பென்குயின்'

உலகில் பறக்க முடியாத பறவை இனங்கள் பல உள்ளன. அவற்றுள் 'பென்குயின்' பறவை இனமும் ஒன்றாகும். இவை தங்கள் சிறகுகளையே நீரில் நீந்துவதற்கான துடுப்புக்களாகத் தகவமைத்துக்கொண்டவை என்று கூறப்படுகின்றது. உலகில் 17 வகையான பென்குயின்கள் உள்ளன.


எம்பெரர் பென்குயின்


சிறிய நீலப் பென்குயின்





## வாழிடம்

பூமியின் தென் அரைக்கோளப் பகுதியிலும், வடக்கே கெலப்பாகொஸ் தீவுகளிலும் பென்குயின்கள் அதிகமாக வாழ்கின்றன. இவை உணவுக்காக பூமத்திய ரேகையையும் கடந்து செல்வதுண்டு. அண்டார்க்டிக்கா,நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, சிலி, பெரு, ஆர்ஜென்டீனா மற்றும் தென் ஆபிரிக்கா, நமீபியா போன்ற இடங்களிலும் இவற்றைக் காணலாம்.

## உயிர் வாழ்தல்

★ கடல் நீரைக் குடித்து பென்குயின்களால் உயிர் வாழ முடியும்.

★ பென்குயின்களின் பிரதான உணவு மீன்கள் ஆகும்.

★ பென்குயின்கள் தமது வாழ்நாட்களில் பாதியை நீரிலும், பாதியை நிலத்திலும் கழிக்கின்றன.

★ பொதுவாகப் பெரியவகை பென்குயின்கள், வெப்பத்தை உடலில் தக்கவைக்கும் திறனைப் பெற்றிருக்கின்றன. அதனால், அதிக குளிர்ப் பகுதிகளிலும் அவற்றால் வாழமுடியும். எனினும், சிறியவகை பென்குயின்களால் அதிக குளிர் நிலவும் பகுதிகளில் வாழமுடியாது.

## பெரியதும் சிறியதும்

✱ பென்குயின் வகைகளில் மிகப் பெரியது 'எம்பெரர் பென்குயின்' (Emperor penguin) ஆகும். இவ்வகை பென்குயின்கள் ஒரு மீற்றருக்கும் அதிகமான உயரமும் 35 கிலோகிராம் எடையும் கொண்டவை.

✱ பென்குயின்களில் மிகச் சிறியது 'சிறிய நீலப் பென்குயின்' (Little blue penguin) ஆகும். இவ்வகை பென்குயின்கள் 40 செ.மீற்றர் உயரமும் ஒரு கிலோகிராம் எடையையும் கொண்டிருக்கும்.

உங்கள் அபிமான

தமிழ்Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs.10/=

தினசரி தேசிய பத்திரிகையாக

வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions | the SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ்Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டைனோசர்கள்’ பற்றி அறிந்ததும் அறியாததும்

டைனோசர்களை மையப்படுத்தி வெளிவந்த ஜுராசிக் பார்க் திரைப்படத்தின் நான்காம் பாகமான ஜுராசிக் வேர்ல்ட் திரைப்படம் உலகம் முழுவதும் திரையிடப்பட்டு, பெரும் வரவேற்பினைப் பெற்று வருகின்றது. சுமார் 230 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூமியை ஆக்கிரமித்திருந்த டைனோசர்கள் தொடர்பில் அறிய வேண்டும் என்ற ஆவல் இத்திரைப்படங்களின் பின்னரே அனைவர் மத்தியிலும் ஏற்பட்டது என்றே கூற வேண்டும்.

அந்தவகையில், ‘ஹவ் இட் வேர்க்ஸ்’ என்ற விஞ்ஞான சஞ்சிகை, டைனோசர்கள் பற்றி இதுவரை நாம் அறிந்து வைத்துள்ள மற்றும் அறியாத விடயங்கள் பற்றி அண்மையில் பிரசுரித்திருந்தது. அதிலிருந்து சில சுவாரஸ்ய தகவல்களை நாம் உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.





## ஆயுள் காலம் 300 ஆண்டுகள்

ஒரு சில டைனோசர்கள் 300 ஆண்டுகள் இப்பூமியில் வாழ்ந்துள்ளன என்று கூறினால் நீங்கள் நம்புவீர்களா? ஆனால், அதுதான் உண்மையாகும். புதைபடிமவியல் விஞ்ஞானிகளின் ஆய்வு முடிவுகளிலிருந்தே, இவ்விடயம் தெரியவந்துள்ளது. இவ்வாறான நீண்ட ஆயுள் காலம் சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளும் டைனோசர்களுக்கே இருந்துள்ளது. சூழலுக்கு ஏற்ப தமது உடலின் தட்பவெப்பங்களை கூட்டிக் குறைத்து அவை வாழ்ந்துள்ளன. டைனோசர்கள் தோற்றத்தில் ஊர்ந்து செல்லும் பிராணிகள் போன்றவையாகும். ஆனால், தற்போதுள்ள ஊர்வனங்களுக்கு அவ்வாறு சூழலுக்கு ஏற்ப உடல் வெப்பநிலையினை மாற்றிக் கொள்ளும் ஆற்றல் இல்லை.

டீ-ரெக்ஸும் ஸ்டெகோசோரஸும்



## மிகவும் விசாலமான ஆஜன்ட்டிசோரஸ்

மிகவும் விசாலமான டைனோசர் எது என்று இதுவரையில் சரிவர அறிய முடியவில்லை. ஏனெனில், நாளாந்தம் பலதரப்பட்ட வகைகளை சேர்ந்த டைனோசர்களை புதைபடிமவியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருகின்றனர். எனினும், இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள டைனோசர்களில் மிகவும் விசாலமானதாக 70 தொன் எடை கொண்ட ‘ஆஜன்ட்டிசோரஸ்’ என்ற தாவர உண்ணி டைனோசர் கருதப்படுகின்றது. இவை 97 மில்லியன் முதல் 94 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது. நீளம் 40 மீற்றராகும். உயரம் 7 மீற்றராகும்.


## டீ-ரெக்ஸைவிட உசேன் போல்ட்டின் வேகம் அதிகம்

டைனோசர் உலகின் கொடூரமான இனமாக ‘ட்டைரெனசோரஸ் ரெக்ஸ்’ எனப்படும் ‘டீ- ரெக்ஸ்’ திகழ்கின்றது. இது இரண்டு கால்களால் நடமாடும் மாமிச உண்ணி டைனோசர் இனமாகும். டீ-ரெக்ஸின் ஓட்ட வேகம் மணித்தியாலத்திற்கு 29 கி.மீற்றர் ஆகும்.

உலகில் வேகமாக ஓடக்கூடிய வீரராக கருதப்படும் ஓட்டப் பந்தய வீரர் உசேன் போல்ட்டினால் டீ- ரெக்ஸை இலகுவாக தோற்கடிக்க முடியும் என்று கூறப்படுகின்றது. ஏனெனில், உசேன் போல்ட் மணித்தியாலத்திற்கு 44 கி.மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியவர். கணினி மூலம் மேற்கொண்ட கணிப்பீடுகளில் இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ட்ரொமிசியோமிஸ் டைனோசர் கூட்டத்தில் அகப்பட்டால் உசேன் போல்ட் நிச்சயம் தோற்றுவிடுவார். காரணம், இந்த டைனோசர்கள் மணித்தியாலத்திற்கு 60 கி.மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியவை என்று கூறப்படுகின்றது.

## பேரழிவுகளிலிருந்து உயிர் தப்பின...

சுமார் 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் நிகழ்ந்த இரண்டு இயற்கைப் பேரழிவுகளினால் பூமியில் வாழ்ந்த உயிரினங்கள் அழிவினை எதிர்நோக்கியதாக புதைபடிமவியல் சான்றுகளின்மூலம் தெரிய வருகின்றது. ஆனால், இந்த இரண்டு பேரழிவுகளில் இருந்தும் டைனோசர்கள் உயிர் தப்பியுள்ளன. சிறிய வகை டைனோசர்கள் உட்பட நிலத்தில் வாழ்ந்த மற்றைய உயிரினங்கள் அழிவுற்றாலும் ராட்சத டைனோசர்கள் உயிர் தப்பி வாழ்ந்துள்ளதாகவே புதைபடிமவியல் சான்றுகளினூடாக தெரிய வருகின்றது.




## இறக்கைகள் இருந்தாலும் பறக்க முடியவில்லை

ஜுராசிக் பார்க் திரைப்படத்திலும் தற்போது வெளியாகியுள்ள ஜுராசிக் வேர்ல்ட் திரைப்படத்திலும் வெலாசிரெப்டர் என்ற டைனோசர் இனம் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது. இவ்வகை டைனோசர்கள் மாமிச உண்ணிகளாகும். இரண்டு கால்களில் நடக்கும் ஆற்றல் பெற்றவை. ரெப்டர் இன டைனோசர்கள் இறக்கைகள் கொண்ட உயிரினங்கள் என்றும் புதைபடிமவியல் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

இறக்கைகள் இருந்தாலும் இவற்றினால் பறக்க முடியாது. ஜுராசிக் வேர்ல்ட் திரைப்படத்தில் ரெப்டர்கள் மனித ஆணைக்கு கட்டுப்படும் விதத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றன. மற்றைய திரைப்படங்களிலும் இவை கொடூரமானவையாகவும் புத்திசாதுர்யம் மிக்கவையாகவும் சித்தரிக்கப்பட்டுள்...
மையாயினும், தி...
சித்தரிக்கப்படுவத...
உயரமான ரெப்ட...
இருக்கவில்லை எ...
கள் தெரிவிக்கின்ற...




## வேறு காலங்க... சேர்ந்த டை...

‘டீ-ரெ...’ மற்ற...
ஸ்டெகோசோரஸ்...
டைனோசர்கள் இ...



காலப்பகுதிகளில் ...
என்று கூறப்படுகி...
ஸ்டெகோசோரஸி...
குப்பகுதி முழுவது...
கள் போன்ற அ...
காணமுடியும். இ...
கால்களால் நடக்கு...
பெற்ற தாவர உ...
இவை ஜுராசிக் கா...
வாழ்ந்துள்ளதோடு...
80 மில்லியன் ஆ...
பின்னரே, டீ-ரெக்...
கள் உலகில் தோன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ள் ...றக்க ...ல

...டத்திலும் ...ளை ...படத்தி ...ற ...ம் பிரபல் ...கை ...ண்ணிக ...நடக்கும்

சித்தரிக்கப்பட்டுள்ளன. இது உண்மையாயினும், திரைப்படத்தில் சித்தரிக்கப்படுவதனைப் போன்று உயரமான ரெப்டர் டைனோசர்கள் இருக்கவில்லை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## வேறுபட்ட காலங்களைச் சேர்ந்த டைனோசர்கள்

'டீ-ரெ...' மற்றும் ஸ்டெகோசோரஸ் ஆகிய டைனோசர்கள் இரு வேறுபட்ட

## பெரியளவிலான ஒட்டுண்ணிகள்

டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் அவற்றின் உடலில் ஒட்டியிருந்து இரத்தம் உறிஞ்சிய ஒட்டுண்ணிகள் இப்பொழுது வாழும் ஒட்டுண்ணிகளைவிட பத்து மடங்கு பெரிதாக இருந்துள்ளன என்று புதைபடிம சான்றுகளின் மூலம் தெரியவந்துள்ளது. சியூடோபுலெக்ஸ் ஜுராசிக்கஸ் மற்றும் சியூடோபொலெக்ஸ்

அதன் சுற்றளவு 45 செ.மீற்றர் ஆகும். நீளம் 60 செ.மீற்றர் ஆகும். இதனைவிட பெரியளவிலான முட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## இன்னும் வாழ்கின்றன

இன்று நாம் பறவைகளினூடாக டைனோசர்களைக் காண்கின்றோம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 19 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கியோப்டெரிஸ் புதைபடிமத்தின் மூலம் இந்த




டீ-ரெக்ஸினை தோற்கடிக்கும் உசேன் போல்ட்


ராட்சத ஒட்டுண்ணிப் பூச்சியொன்று

...ப்டர் இன ...கள் ...ன்றும் ...னிகள் ...ம் இவற் ...ஜுராசிக் ...ரப்டர்கள் ...படும் ...டுகின் ...களிலும் ...ாகவும் ...ாகவும்

காலப்பகுதிகளில் வாழ்ந்துள்ளன என்று கூறப்படுகின்றது. ஸ்டெகோசோரஸின் முதுகுப்பகுதி முழுவதும் இரத்தினக்கற்கள் போன்ற அமைப்பினைக் காணமுடியும். இவை இரண்டு கால்களால் நடக்கும் ஆற்றல் பெற்ற தாவர உண்ணிகளாகும். இவை ஜுராசிக் காலப்பகுதியில் வாழ்ந்துள்ளதோடு, இவை அழிந்து 80 மில்லியன் ஆண்டுகள் கழிந்த பின்னரே, டீ-ரெக்ஸ் டைனோசர்கள் உலகில் தோன்றியுள்ளன.

மெக்னஸ் என்று இந்த ஒட்டுண்ணிகளுக்கு பெயரிடப்பட்டுள்ளன. இந்த ஒட்டுண்ணிகளில் நன்கு வளர்ச்சி பெற்ற பெண் இனம் 21 மில்லிமீற்றர் நீளம் கொண்டது. ஆண் இனம் 15 மில்லி மீற்றர் நீளம் கொண்டதாகும்.

## டைனோசர் முட்டைகள்

1990 களில் மொங்கோலியாவில் பெரியளவிலான டைனோசர் முட்டை கண்டுபிடிக்கப்பட்டது.

விடயம் உறுதியாகியுள்ளது. இது சிறகுகள் கொண்ட டைனோசர் இனமாகும். டைனோசர் இனமொன்று பறவையாக பரிணாமமடைந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மேலும், டைனோசர்கள் வாழ்ந்த காலப்பகுதியிலும்கூட, தற்போது உலகில் வாழும் முதலைகள் இருந்ததாகவும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

# வாரம் ஓர்... ஆத்திசூடி



நீதிக்கு அன்னையாக விளங்கிய ஔவையார், ஆத்திசூடி மூலமாகக் கூறும் மற்றுமொரு முத்தான அறவுரையே 'ஓதுவ தொழியேல்' என்பதாகும்.

'ஓதுதல்' என்றால், 'கற்றல்' என்றும் 'கற்பித்தல்' என்றும் பொருள் கொள்ள வேண்டும். அதாவது, 'கற்றலை நிறுத்திவிடாதே; கற்றதைப் பிறருக்கு எடுத்தியம்புவதையும் விட்டுவிடாதே' என்ற தொனிப்பொருளில் இவ்வாசகம் காணப்படுகின்றது.

பதின்மூன்று வருடங்கள் பாடசாலையில் பெறும் கல்வியறிவு மட்டும் போதாது. வாழ்க்கையை சீராகக் கொண்டுசெல்ல எம் ஆயுள் ரேகை அழியும்வரை இடைவிடாது கற்றல் வேண்டும்.

## ஓ - ஓதுவ தொழியேல்



### தொடர் விளக்கக் கட்டுரை

கற்பதற்கு நாளென்றும் பொழுதென்றும் ஒன்றில்லை. வயது வரையறைகளும் இல்லை. வறுமை கற்றலுக்குத் தடையுமில்லை. ஏனென்றால், கல்வி என்பது கரைகாணக்கூடிய ஒன்றன்று.

''நான் எல்லாவற்றையும் கற்றுத் தேர்ந்துவிட்டேன்'' என்று யாராலும் கூறிவிட முடியாது. 'நாம் கற்றது கையளவு; கல்லாதது உலகளவு' என ஔவையாரே ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். கற்றவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், 'பகிர்தலின்மூலம் ஆழமும் விரிவும் பெறுவது ஞானம்'. காலம் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அதற்கேற்ப நாமும் மாறிக்கொள்ள வேண்டும். கற்களை எண்ணிக் கணிதம் கற்ற காலம் மலையேறிப்போய், கணினியில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலமே வந்துள்ளது.

ஆன்மீக தொடர்பைக் கைக்கொண்டு, உள்ளத்தை தூய்மையாக்கிக்கொண்டு சரியான புரிதலோடு கற்று வாழ்வில் உயர முயல வேண்டும். எனவே, 'ஓதும் பழக்கத்திற்கு ஒருபோதும் ஓய்வு கொடுக்கக்கூடாது' என்ற ஔவையாரின் இன்னுரையை இதயத்தில் நிலைநிறுத்திக்கொள்வோம்.

- சப்ரி எம்.ஷாஃபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பறவைகளின் சொர்க்காபுரி

**கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள யாவுத வனஜீவிகள் திணைக்களத்தின்கீழ் நிர்வகிக்கப்படும் பாதுகாக்கப்பட்ட வனாந்தரங்களாக 'குமண' மற்றும் 'லாஹுகல' தேசிய வனங்கள் திகழ்கின்றன.**

## குமண தேசிய வனம்

கும்புக்கன் ஓயாவினை எல்லையாகக் கொண்டு 35 ஆயிரம் ஹெக்டெயர் பரப்பளவு கொண்டதாக குமண வனாந்தரம் அமைந்துள்ளது. பறவைகளின் சொர்க்காபுரியாகக் கருதப்படும் குமண தேசிய வனாந்தரப்பகுதியில், 225 பறவை இனங்கள் சஞ்சரிப்பதாக அறியக்கிடைத்துள்ளது. 1938 ஆம் ஆண்டு முதல் குமண தேசிய வனாந்தரப்பகுதிக்குட்பட்ட ஒரு பகுதி, பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையிலுள்ள பறவைகளின் வசிப்பிடமாகவும் இனப்பெருக்கத்திற்கான பகுதியாகவும் இந்த குமண வனாந்தரத்தினைக் குறிப்பிட முடியும்.

தவிர, வருடாந்தம் ஏப்ரல்-ஜூலை மாதங்களில் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பறவைகள் இப்பகுதிக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த பகுதி சுற்றுலாப் பறவைகளின் தாயகமாகக் கருதப்படுகின்றது. வருடத்தின் செப்டெம்பர்-டிசம்பர் மாதங்களில் சுற்றுலாப் பறவைகளை இங்கு பரவலாகக் காணமுடியும். வெளிநாடுகளிலிருந்து வரும் பறவைகள், இங்கு கூடுகளை அமைத்து, இனப்பெருக்கம் செய்து தமது புதிய சந்ததியுடனேயே சொந்த நாடுகளுக்கு திரும்பிச் செல்கின்றன.


குமண சரணாலயத்தில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் உள்ளன. அவற்றுள் புதுபேவ, பம்பரகஸ்தலாவ, நெலும்பத்பொக்குண, போவத்த, குடும்பிகல ஆகிய விகாரைகள் பிரதானமானவை ஆகும்.

## லாஹுகல தேசிய வனம்

இலங்கையில் அதிக யானைக் கூட்டங்களைக் காணக்கூடிய இடமாக லாஹுகல வாவி மற்றும் கித்துலான வாவி பகுதிகளைக் குறிப்பிடலாம். இங்கு ஒரே தடவையில் சுமார் 150 யானைகளை கூட்டமாகக் கண்டுகொள்ளலாம். இப்பகுதியில் யானைகள் கூட்டமாக நடமாடுவதற்கான காரணம்,லாஹுகல வாவி பகுதியில் 'பெரு' என்ற தாவர இனம் அதிகளவில் பரவியிருக்கின்றமையே ஆகும். பெரு என்ற தாவரத்தினை உட்கொள்வதற்கு யானைகள் அதிக ஆர்வம் காட்டுகின்றன. மேலும், இலங்கைக்கு மட்டுமே உரிய உயிரினங்களையும் இங்கு காணலாம். மந்திகள், சாம்பல் நிற மந்திகள், கரடிகள், காட்டுப் பூனைகள், சாம்பல் சிறுத்தை, புள்ளி மான்கள், காட்டெருதுகள், காட்டுப் பன்றிகள், புலிகள், காட்டுச் சேவல்கள், மயில்கள், கொக்குகள், நாரைகள் ஆகிய உயிரினங்களை இங்கு காணலாம். பல வகை காட்டு மரங்களும் இங்கு காணப்படுகின்றன.

இந்த வனாந்தரத்தினுள் லாஹுகல வாவி, கித்துலான வாவி, சாங்கமுவ வாவி, யால்பொத்தவெவ ஆகிய வாவிகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. காட்டுப்புதர்கள் பரவலாக உள்ள உலர் வலய பசுமை சூழ் வனாந்தரமான லாஹுகல வனாந்தரத்தின் வடக்கு மற்றும் தெற்கு எல்லையில், கரந்த ஓயா மற்றும் ஹெட ஓயா ஆகிய நீர்நிலைகள் காணப்படுவதனால், இப்பகுதி பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இந்த நீர்நிலைகளுக்கருகில் பலதரப்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டுப் பறவைகளையும் கண்டுகளிக்கலாம். இந்த சரணாலயப்பகுதியில் கோட்டே விகாரை, மகுல் மகா விகாரை போன்ற வணக்கஸ்தலங்களும் அமைந்துள்ளன. இந்த விகாரைகள் புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகும்.

-(இ)









noolaham.org | aavanaham.org

# நீர்த்தேக்கத்தினைப் பாதுகாப்பதற்காக பிளாஸ்டிக் பந்துகள் அடங்கிய விரிப்பு!

*அமெரிக்காவின் மாநிலங்கள் பலவற்றின் நீர்த்தேவையை நிறைவு செய்கின்ற கலிபோர்னியாவின் சில்மான் நீர்த்தேக்கத்தின் நீர் வளமானது வறட்சியின் காரணமாக வற்றிவிடாதிருப்பதற்காக நீர்த்தேக்கத்தின் மேற்புறமாக பிளாஸ்டிக் பந்துகளை விரிப்பு வடிவில் போட்டுவிட அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். அந்தவகையில், கிட்டத்தட்ட 9 கோடியே 60 லட்சம் சிறியரக பிளாஸ்டிக் பந்துகள் தற்போது நீரின்மேல் போடப்பட்டுள்ளன.*





## சில்மான் நீர்த்தேக்கம்

75 ஏக்கர் பரப்பில் இந்த சில்மான் நீர்த்தேக்கம் அமையப்பெற்றுள்ளது. இவ்வாறு பந்துகளை விரிப்பாக இடுவதன் மூலம் நீர் ஆவியாகி நீர்த்தேக்கம் வற்றிப்போகும் அபாயம் தவிர்க்கப்படுவதுடன், நீர்த்தேக்கத்தில் கழிவுகள் சேரல், தூசுக்கள் இரசாயனங்கள் சேரல் ஆகிய அ[illegible]துக்களும் தவிர்க்கப்ப டு[illegible]ாக மாநில நகரபிதா (மேயர்) எரிக் கார்செட் குறிப்பிட்டுள்ளார்.

## நீர் வளம்

உலகின் மிகப்பெரிய நிலத்தடி நீர்வளம் வேகமாக வற்றி வருவதாக அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறியதை அடுத்தே, நீர்வளத்தினைப் பாதுகாப்பது குறித்து அதிகாரிகள் அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளனர்.

## செய்மதி கண்டுபிடிப்பு

நாஸா நிறுவனத்தின் செய்மதிப் புகைப்படத்தின் மூலமே இத்தகைய வறட்சியான காலநிலை குறித்த தகவலை அதிகாரிகள் அறிந்து கொண்டுள்ளனர். மேலும் நாஸா நிறுவனத்தின், பூமியின் சுற்றுப் பாதையில் உள்ள இரண்டு சோடி செய்மதிகளின் புகைப்படங்களும் உலகின் எதிர்கால வறட்சி குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளன. 'கேரஸ் இரட்டையர்கள்' என்ற பெயர் கொண்ட செய்மதிகளே இப்பணியினை மேற்கொண்டுள்ளன. பூகோளவியல் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறவே இந்த செய்மதிகள் பூமியின் சுற்றுப்பாதையில் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரதான நீர் வளப்பகுதிகள்

பூமியின் பெருங்கண்டங்களில் சில பகுதிகளில் பிரதான நீர் வளப் பகுதிகளைக் காண முடியும் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மற்றைய பகுதிகளுக்கு இதன்மூலமே நீர் கிடைக்கின்றது. பிரதான நீர் ஊற்றுக்கள் அனைத்தும் இந்த பகுதிகளிலேயே உள்ளதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பூமியின் வெப்பநிலை அதிகரிப்பு, சனத்தொகையில் வேகமான வளர்ச்சி காரணமாக இந்த (பிரதான) தாய் நீர்வளப்பகுதிகள் வற்ற ஆரம்பித்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அரேபிய நாடுகளை மையமாகக் கொண்ட மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள பிரதான நீர்வளப் பகுதி அராபி அக்கிவார் தொகுதியாகும். இது 60 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களின் நீர் தேவையினைப் பூர்த்தி செய்கின்றது. அதிகளவிலான பயன்பாடு காரணமாக இது தற்போது வற்ற ஆரம்பித்துள்ளது. அத்துடன், இமயமலை சார்ந்த நீர்வளப்பகுதியும் வற்றிப் போகும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ளது.

## அதிகரிக்கும் வெப்பநிலை

கலிபோர்னியா சார்ந்த விவசாய நடவடிக்கைகள் இந்த பிரதான நீர் வளப் பகுதியினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இதுவும் வேகமாக வற்றிப்போகும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ளது. மனிதனின் செயற்பாடுகள் பூமியின் வெப்பநிலையை அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. அத்துடன், பூமியின் வளிமண்டலத்தில் ஒட்சிசன் சதவீதம் வேகமாகக் குறைவடைந்து வருவதாகவும் அமெரிக்க காலநிலை விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஒட்சிசன் அளவு குறைந்து காபனீரொக்சைட்டின் அளவு அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## குறைவடையும் ஒட்சிசன்

கடந்த் 514 மில்லியன் ஆண்டுகள் காலப்பகுதியில் பூமியின் வளிமண்டலத்தில் ஒட்சிசன் சதவீதம் 10 முதல் 35 சதவீதமாக காலத்திற்கு காலம் மாறுபட்டுள்ளது. எனினும், 2015 ஆம் ஆண்டு இச்சதவீதம் அதிகரிக்காமல் குறைவடைந்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.உலகில் அதிக வெப்பநிலை நிலவிய ஆண்டாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்த ஆண்டும் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டிலும் மேலும் வெப்பநிலை அதிகரிக்கும் என்று அமெரிக்க காலநிலை அறிஞர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் நண்பர்கள் மற்றும் அம்மா ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා:** **ආ.. අද පුතාලා පාඩම් කරනවාද? හොඳ ළමයි.**
ஆ.... அத புதாலா பாடம் கரனவாத? ஹொந்த லமய்.
அம்மா: **ஆ... இன்று நீங்கள் பாடம் படிக்கிறீர்களா? நல்ல பிள்ளைகள்.**

**කමල්:** **ඔව් අම්මේ. අපි ආයේ හෙට සෙල්ලම් කරනවා.**
ஒவ் அம்மே. அப்பி ஆயே ஹெட்ட செல்லம் கரனவா.
கமல்: **ஆம் அம்மா. நாம் மீண்டும் நாளை விளையாடுவோம்.**

**අම්මා:** **ඒක හොඳයි. සෙල්ලම් කරන්නත් ඕනේ. දැන් මේ තේ බොන්න.**
ஏக்க ஹொந்தய். செல்லம் கறன்னத் ஓனே.
தென் மே தே பொன்ன.
அம்மா: **அது நல்லது. விளையாடவும் வேண்டும்.**
**இப்போது இந்த தேநீரைக் குடியுங்கள்.**

**රාජු:** **අපි හෙට මොනවද කරන්නේ?**
அப்பி ஹெட்ட மொனவத கரன்னே?
ராஜா: **நாங்கள் நாளைக்கு என்ன செய்வோம்?**

**සුනිල්:** **අපි හෙට ක්‍රිකට් ගහමු.**
அப்பி ஹெட்ட கிரிக்கெட் கஹமு.
சுனில்: **நாங்கள் நாளை கிரிக்கெட் விளையாடுவோம்.**

**කමල්:** **ක්‍රිකට් ගහන්න කට්ටිය කෝ?**
கிரிக்கெட் கஹன்ன கட்டிய கோ?
கமல்: **கிரிக்கெட் விளையாட ஆட்கள் எங்கே?**

**සුනිල්:** **මම යාලුවන්ට කෝල් කරල එන්න කියන්නම්.**
மம யாலுவன்ட்ட கோல் கரல என்ன கியன்னம்.
சுனில்: **நான் நண்பர்களுக்கு கோல் எடுத்து வரச் சொல்கிறேன்.**

**කමල්:** **පිට්ටනියට ගියාම තව ළමයි ඉන්නවනේ.**
பிட்டனியட்ட கியாம தவ லமய் இன்னவனே.
கமல்: **மைதானத்திற்குச் சென்றால் இன்னும் பிள்ளைகள் இருப்பார்கள் தானே.**

**සුනිල්:** **හෙට කීයටද එන්න කියන්නේ?**
ஹெட்ட கீயட்டத என்ன கியன்னே?
சுனில்: **நாளைக்கு எத்தனை மணிக்கு வரச் சொல்வது?**

**කමල්:** **හෙට උදේ 8.30ට විතර එන්න කියන්න.**
ஹெட்ட உதே அட்டய் திஹட்ட விதர என்ன கியன்ன.
கமல்: **நாளை காலை 8.30 மணி அளவில் வரச் சொல்லுங்கள்.**

**සුනිල්:** **හොඳයි කමල්, මම කියන්නම්.**
ஹொந்தய் கமல்,
மம கியன்னம்.
சுனில்: **நல்லது கமல், நான் சொல்கிறேன்.**



### பயிற்சி

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. நாளை விளையாடுவோம்.
.....................................................
ii. இந்த தேநீரைக் குடியுங்கள்.
.....................................................
iii. விளையாட ஆட்கள் எங்கே?
.....................................................




## Compound Sentence and Complex Sentence
## கூட்டு வாக்கியம் மற்றும் கலப்பு வாக்கியம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகையான வாக்கியத் தொகுதிகளுக்கு இடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை இங்கே கண்டறிவோம்.

**இலக்கணக் குறிப்பு:** இரண்டு தனித்தனி வாக்கியங்கள் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தனித்தனி வாக்கியங்கள், ஓர் இணைக்கும் சொல்லால் (Conjuction) அல்லது பல இன இணைக்கும் சொற்களால் ஒன்றிணைக்கப்பட்டு உருவாகும் ஒரு வாக்கியமே, ஒரு கூட்டு வாக்கியமாக (Compound Sentence) அமைகின்றது என முன்னர் கற்றோம் அல்லவா?

* ஆனால், கலப்பு வாக்கியம் (Complex Sentence) என்பது சற்று வித்தியாசமாக அமைந்துள்ளது. அதாவது, ஒரு முழுமையான வாக்கியமும் (தனி வாக்கியம்), வேறொரு வாக்கியப் பகுதியும் இணைந்து உருவாகும் வாக்கியமே கலப்பு வாக்கியம் ஆகும்.

**மேலும் ஒரு விளக்கம்:** ஒரு கலப்பு வாக்கியத்தில் (Complex Sentence) இடம்பெற்றுள்ள முழுமையான வாக்கியத்தை (தனி வாக்கியத்தை), பிரதம வாக்கியப் பகுதி (Chief Clause) எனவும், அதனோடு இணைந்து வருகின்ற வேறொரு வாக்கியப் பகுதியை, துணை வாக்கியப் பகுதி (Subordinate Clause) எனவும் ஆங்கில இலக்கண ரீதியாகக் குறிப்பிடப்படுவதுண்டு.

* இனி வாக்கியங்களை அவதானிப்போம்.

அ) This is the hand-phone which my father gave me.
இதுதான் எனது தந்தை எனக்குத் தந்த கைத்தொலைபேசி ஆகும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

**குறிப்பு:** மேற்படி கலப்பு வாக்கியத்தை பின்வருமாறு இரண்டு பகுதிகளாகப் பகுத்து ஒப்பிட்டுப் பார்ப்போமாகில் (when we analyse), அதில் இடம்பெற்றுள்ள This is the hand-phone என்பது பிரதம வாக்கியப் பகுதி (Chief Clause) எனப்படுகின்றது. மற்றும் which my father gave me என்பது துணை வாக்கியப் பகுதி (Subordinate Clause) எனச் சொல்லப்படுகின்றது.

* மேலும் உதாரணங்களைப் பார்ப்போம்.

ஆ) I have lost the camera which I bought yesterday.
நான் நேற்று வாங்கிய கெமராவைத் தொலைத்துவிட்டேன்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* I have lost the camera.
(பிரதம வாக்கியப் பகுதி -Chief Clause)

* Which I bought yesterday.
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

இ) These are the mangoes which we brought.
இவைதான் நாங்கள் கொண்டுவந்த மாம்பழங்கள் ஆகும்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* These are the mangoes.
(பிரதம வாக்கியப் பகுதி -Chief Clause)

* Which we brought.
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சந்திரன் மீது தரையிறங்கிய ரோவர் விண்கலம்

காலத்திற்கு காலம் சந்திரனை ஆய்வுசெய்வதற்காக மனிதன் பல்வேறு விண்கலங்களை அனுப்பிய வண்ணமே உள்ளான். இவற்றில் ரோவர் எனும் விண்கலத்தின்மூலம் சந்திரனின் மேற்பரப்புக் குறித்து மென்மேலும் ஆய்வுகள் நடைபெறுகின்றன. இதுவரை பல்வேறு நாடுகளினால் சந்திரன்மீது ரோவர் விண்கலங்கள் சில அனுப்பி வைக்கப்பட்டன. அவ்வாறே மேலும் பல அனுப்பப்படவும் உள்ளன. அத்தகைய விண்கலங்கள் சில பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.



நாடு - சோவியத் ரஷ்யா
அனுப்பப்பட்டது - 1970 நொவெம்பர் 10
திணிவு - 756 கி.கிராம்


## லூனோபொட் 01



இது உலகின் முதலாவது தொலைதூரக் கட்டுப்பாட்டு சந்திரனுக்கான ரோவர் விண்கலமாக கருதப்படுகின்றது. இதற்கு எட்டு சக்கரங்கள் இருப்பதோடு, அவ்வனைத்து சக்கரங்களுக்கும் இலத்திரனியல் மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதில் இருவர் பயணிக்கலாம். ரோவரில் பொருத்தப்பட்டுள்ள தொலைக்காட்சி கெமராவின் உதவியுடன் அதன் ஓட்டுனர் தான் செல்லவேண்டிய பாதையைக் கண்டுபிடித்தார். மற்றையவர் பூமியுடன் தொடர்பை பேணினார்.சூரிய சக்தியால் இதற்கான வலு பெறப்பட்டது. சந்திரனின் 500 இற்கும் மேற்பட்ட மண்மாதிரிகளும், அருகில் இருந்து எடுக்கப்பட்ட 20,000 புகைப்படங்களும் 206 பெனோரெம் புகைப்படங்களையும் இந்த ரோவர் விண்கலம் பூமிக்கு அனுப்பியது.

## லூனார் ரோவிங்

விசேடமாகத் தயாரிக்கப்பட்ட விண்வெளி வீரர்களுக்கான உடைகளின் காரணமாக, ஆசனத்தின்மீது அமரமுடியும். 490 கிலோகிராம் நிறையை சுமக்கக்கூடிய ஆற்றல் இந்த ரோவருக்குண்டு. மணிக்கு 9 கிலோ மீற்றர் சாதாரண வேகத்தைக் கொண்டது. பொருத்தப்பட்டிருந்த வர்ணத் தொலைக்காட்சி கெமரா மூலம் காட்சிகள் பெறப்பட்டன.





நாடு - அமெரிக்கா
அனுப்பப்பட்டது - 1971 ஜூலை 18
திணிவு - 210 கி.கிராம்


## எஸ்ட்ரோபொடிக் லூனார் ரோவர்




நாடு - அமெரிக்கா
அனுப்பப்பட்டது - இனிமேல்தான்
திணிவு - அறிவிக்கப்படவில்லை

சந்திரனின் மீதும், செவ்வாயின் மீதும் அமைந்துள்ள இருள் வலயங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் குறித்து மதிப்பீடு செய்வது இதன் நோக்கமாகும். இத்தகைய இடங்களுக்குச் செல்வது ஆபத்துக்கள் நிறைந்ததாக இருப்பதால் இத்தகைய் ரொபோ ரோவர் ஒன்றை பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இது நிகழ்கால ரோவர் தொழில்நுட்பத்தின் உச்சமெனக் கொள்ளலாம். எஸ்ட்ரோபொய்க் டெக்னோலஜி எனும் நிறுவனத்தின் கீழ் இதன் தயாரிப்பு பணிகள் நடைபெறுகின்றன.






## ஜேட் ரெபிட்

'ஜேட் ரெபிட் ரோவர்' வசம் பாரிய அளவிலான இரு சூரிய பெனல்கள் உள்ளன. அதன் மூலமாகக் கிடைக்கும் சக்தியில் இதன் ஆறு சக்கரங்கள் இயங்குகின்றன. பூமியில் இருந்து இது வழிநடத்தப்படுவதால் இதற்கு தன்னியக்க ஓடும் தொகுதி ஒன்று உள்ளது. இது சந்திரனில் ஒரு மாதத்திற்கும் அதிகமாக தங்கியிருந்து 100 மீற்றர் பயணித்து புவிக்கு புகைப்படங்களை அனுப்பியதோடு மண் மாதிரிகளையும் ஆய்வுசெய்தது. 2014 ஜனவரி 25 ஆம் திகதி அத்தொகுதி செயல் இழந்தது.



நாடு - சீனா
அனுப்பப்பட்டது - 2013 டிசம்பர் 01
திணிவு - 140 கி.கிராம்







இலத்தீன் மொழியில் 'மெயார் இம்ப்ரியம்' என அழைக்கப்படும் சந்திரனில் உள்ள இந்தப் பகுதி 1,145 கிலோ மீற்றர் விட்டமுள்ள ஒரு பிரதேசமாகும். இது 3.8 பில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றியுள்ளது. லாவாவின் தொடர்ச்சியான படிவால் உருவான இப்பிரதேசம் மட்டமான சமதரையாக இருப்பதால் விண்கலத்தை தரையிறக்குவதற்கு மிகவும் பொருத்தமான இடமாக இதனை இனங்கண்டுள்ளனர். இதுவரை ரோவர் விண்கலம் தரையிறங்கிய இடங்கள் சில இதில் காட்டப்பட்டுள்ளன.

-(அ)

## 'எத்லீட்' ரோவர்

All Terrain Hex - Limited Extra Terrestrial Explorer என்பதன் சுருக்கமாக ATHLETE என இந்த ரோவர் அழைக்கப்படுகின்றது. ஆறு சக்கரங்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. அதனால், எத்தகையதொரு தரைப்பகுதியிலும் பயணிக்கக்கூடிய ஆற்றல் இதற்கு உண்டு. ஆறு அடி உயரத்தில் பாதம் தயாரிக்கப்பட்டுள்ளதால் எந்தவொரு உயரமானதையும் தவிர்த்துச் செல்லமுடியும். இவ் அனைத்து ரோவரிலும் பொருட்களை கொண்டு செல்லும் விதத்தில் உரிய பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன.





நாடு - அமெரிக்கா | அனுப்பப்பட்டது - [illegible] | திணிவு - 850 கி.கிராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**விஜய் சாரணர் உலகம்**

**இன்னும் ஆறு மாதங்களில் ஆரம்பமாகவுள்ள இலங்கையின் மிகப் பெரிய தேசிய சாரணர் ஜம்போரி தொடர்பில் புதிய தகவல்கள் அடங்கிய இந்த கட்டுரை சாரணர்களுக்கும் சாரணியர்களுக்கும் பயன்மிக்கதாக அமையும் எனலாம்.**

# யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரிக்கு அனைத்தும் தயார் நிலையில்!




யாழ்ப்பாணத்தில் சாரணர் செயற்பாடுகள் 1916 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. அதற்கமைய எதிர்வரும் 2016 ஆம் ஆண்டுடன் யாழ்ப்பாணம் சாரணர் சங்கத்திற்கு நூறு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. இப்பொழுது வடக்கில் சாரண உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் அதிகமாக உள்ளது. பாடசாலையில் அமுல்படுத்தப்படும் பாடங்களுக்கு அப்பாலான வெளியக செயற்பாடுகளில் சாரணர் விவகாரம் குறித்து வடபகுதி மாணவ மாணவியர் மத்தியில் பேரார்வம் காணப்படுவதாக வடபகுதி ஆணையாளரும் யாழ்ப்பாணம் தேசிய சாரணர் ஜம்போரியின் தேசிய அமைப்பாளருமான எம்.முஹீட் விஜய் சாரணர் பகுதிக்கு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்; யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரியின் தேசிய அமைப்பாளர்களாக என்னையும், டேமியன் சில்வாவையும் தற்போதைய பிரதான ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரிலேயே நியமித்துள்ளனர். இதன்படி யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரி தொடர்பிலான ஆரம்ப சுற்று கலந்துரையாடல்கள் சில இடம்பெற்றன. வடபகுதி ஆளுநர் பளிஹக்கார மற்றும் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா ஆகியோரதும் வட மாகாண சபையின் முழுமையான பங்களிப்பும் ஆதரவும் இலங்கை சாரணர் சங்கத்திற்கு கிடைத்துள்ளமை பெரும் வெற்றி என்றே குறிப்பிட முடியும்'' என்றார்.

## யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரியின் தேசிய முக்கியத்துவம் என்ன?


வடக்கின் ஐயாயிரம் சாரணர்களும் தெற்கில் சாரணர்கள் ஐயாயிரம் பேரும் இணைந்து முகாமிடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இது தேசிய ஒற்றுமைக்கு ஒரு சிறந்த உத்வேகமாகும். வடக்கு வாழ்மக்களின் வாழ்க்கை, சுற்றாடல் பன்மைத்துவம், கலாசாரம், மதம், குடும்பம், பொருளாதாரம் ஆகிய சமூக கட்டமைப்புகள் குறித்து தெற்கின் சாரணர்களினால் நன்கு அறிந்துகொள்ள இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும். அதேபோல் தெற்கில் உள்ள சாரணர்களின் வாழ்க்கைமுறைகள், மனோபாவம், நட்புறவு போன்றவற்றை வடக்கின் சாரணர்கள் அறிந்துகொள்வதற்கும் அருமையான வாய்ப்பாகும்.

ஒரு நாட்டில் இயங்கும் சாரணர் இயக்கமானது, அந்நாட்டில் நிலவும் அரசியல் அமைப்புக்களைப்போன்று பலம்மிக்கதாக அமைய வேண்டும் என்ற செய்தியினை யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரியில் எழுச்சிபெறச் செய்ய வேண்டும்.

ஒரு நாட்டின் பௌதீக வெற்றி என்பது அந்நாடு பெற்றுக்கொள்ளும் சமூக, மனித வெற்றியிலேயே தங்கியுள்ளது. இதன்படி இலங்கையில் ஐக்கியம் மேலும் உறுதிப்பட சாரணர் இயக்கம் ஓர்

(21 ஆம் பக்கம் பார்க்க)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 155

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | |
| | | | | | |
| 4 | | | | 5 | 6 |
| | | | 7 | | |
| | 8 | | | | |
| 9 | | | 10 | | |

### மேலிருந்து கீழ்

01. கடிதம்.
02. இடது - எதிர்ப்பதம்.
03. எட்டுக் கிராம் நிறைகொண்ட தங்கக் காசு.
06. சிறுமி - எதிர்ப்பாற்சொல்.
07. '.......... சிறிதானாலும் காரம் பெரிது' என்பது பழமொழி.
08. நோய்.

### இடமிருந்து வலம்

01. இறந்த ஒருவரை ஞாபகப்படுத்தி மரியாதை செலுத்துவதைக் குறிக்கும்.
04. ஐந்தை, இரண்டால் பெருக்கினால் வருவது.
05. இனிமையோடு அனுபவித்தலைக் குறிக்கும்.
07. மாமரத்தின் இளையது.
08. உணவு வகையொன்று.
09. கோயிலில் கட்டப்பட்டிருக்கும்.
10. சிறிய மலை. (குழம்பியுள்ளது)


### குறுக்கெழுத்துப் போட்டி இல.154 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மை | தா | ன | ம் | | 2 உ |
| த் | | | | 3 க | டை |
| து | 4 வா | த் | | ம் | |
| ணி | 5 க | | 6 தீ | ப | ம் |
| | ண | | | ளி | 7 வ |
| 8 அ | ம் | பு | | | 9 த |

A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக





### எத்தனை உள்ளன?








இங்குள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களை யேனும் அமைக்க





### சரியான சொல்லை எழுதுக




## அறிவுக்கு விருந்து (09.09.2015) விடைகள்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

கொழும்பு -10 அல்-ஹிதாயா மகா வித்தியாலய அஹதிய்யாப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, அண்மையில் அப்பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்ட கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌஸி மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், அல்-ஹிதாயா பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும், விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஜுனைட் எம்.பஹ்த்)

# ஆழ்மனப் பதிவுகள்





அழகிற்கு வரைவிலக்கணம் இல்லை என்று கூறுவார்கள். இதனால்தான் ஒருவருக்கு அழகாகக் காணப்படும் விடயங்கள் இன்னொருவருக்கு அழகற்றுக் காணப்படுகின்றது. இத்தகைய விடயங்களை



ஒவ்வொருவரிடமும் காணப்படும் ஆழ்மனமே உறுதிசெய்கின்றது. அந்தவகையில், எம்மிடையே இருவகைப்பட்ட மன உணர்வுகள் உள்ளன. ஒன்று வெளிமன உணர்வுகள்; மற்றையது ஆழ்மன உணர்வுகள். வெளிமனத்தில் விடயங்கள் சாதாரணமாகவே பதிவாகின்றன. ஆனால், ஆழ்மனதில் மிக உறுதியாகவே விடயங்கள் பதிவாகிவிடுகின்றன.

ஒவ்வொருவரின் ஆழ்மனத்திலும் பிடித்தமான தோற்றம், பிடித்தமான கற்கை நெறிகள், நிறம், நடை, உடை பாவனை, குரல்வளம், குணம், இயல்புகள் என்பன அவர்களை அறியாமலேயே பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. இது ஒவ்வொரு மனிதருக்கும் பல்வேறுபட்ட வகையில் மாற்றமடைந்து காணப்படும்.

அந்தவகையில் எமது ஆழ்மன உணர்வுகளுக்கு அமைவாக சமூகத்தில் காணப்படும் நபர்களை எமக்கு மிகவும் பிடித்துவிடுகின்றது. அவர்களுடன் நீண்டகாலம் பழகியது போன்ற உணர்வு ஏற்படுகின்றது.

இவ்வாறே, மிக நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்த பல்வேறுபட்ட நிகழ்வுகள் குறிப்பாக சிறு வயதில் அம்மாவின் அரவணைப்பு, அப்பாவின் கண்டிப்பு, ஆசிரியரின் அறிவுரை மற்றும் வேறு பல முக்கிய விடயங்கள் மனித வாழ்நாள் முழுவதும் விட்டகலாது தொடர்வதற்கு இந்த ஆழ்மனப் பதிவுகளே காரணமாக அமைந்துவிடுகின்றது.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.ரஸீபா,
அந்-நூர் ம.கல்., பாணகமுவ.



இ.தாரணி சிந்துஜா,
நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்.ம.கல்., நீர்கொழும்பு.



க.எவான் புளோறியன்,
புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.



எஃப்.ரம்லா,
முஸ்லிம் மகளிர்.கல்.,
பம்பலப்பிட்டி.



கிரிஜன்,
யா/விக்னேஸ்வராக் கல்.,
கரவெட்டி.



ச.துஸ்யந்தி,
விபுலானந்தா த.ம.வித்.,
தெமட்டகொட



ருத்ரி,
ஹைலன்ஸ் மத்திய கல்.,
ஹட்டன்.

# அமேசன் காட்டு வாசிகள்





அடர்ந்த அமேசன் காடுகளில் வாழும் காட்டு வாசிகள் விசேட இயல்புக்களை உடையவர்களாக உள்ளனர். அந்தவகையில், கூர்மையான பார்வைத் திறன், உடல் பலம், நோய் எதிர்ப்பு சக்தி, வேட்டையாடும் திறன் மிகுந்தவர்களாக உள்ளனர்.

காட்டு வாழ்க்கைக்கு நன்கு பழக்கப்பட்டு வாழ்வதனால் நாகரிக மனிதர்களையும் அவர்களின் நட்புக்களையும் சிறிதும் இவர்கள் விரும்புவதில்லை. நவீன உலகத்தையும் நவீன தொழில்நுட்பங்களையும் சிறிதும் அறியாதவர்களாகவும் அத்தகைய உபகரணங்களைக் காணும்போது மிகுந்த அச்ச உணர்வையும் அடைகின்றனர். இவர்களின் வாழ்க்கை முறைகளை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் விசேடமாக அவர்களிடம் காணப்படும் நோய் எதிர்ப்பு சக்திகளையும் அவர்களின் இயற்கை மருத்துவ முறைகளையும் அறிந்து வியப்பின் உச்சிக்கே சென்றுவிடுகின்றனர். இதற்கு காரணமாக அமைவது இயற்கையுடன் ஒன்றித்த வாழ்வே என்றும் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் பிரபல்யமானவர்கள்



# யூரி ககாரின்

ரஷ்யாவில் ஒரு பின்தங்கிய கிராமத்திலுள்ள வறுமைப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்தான் யூரி ககாரின். இவர் ஆரம்பகாலத்தில் உலோக வார்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வந்தார். அதன் பின்னர் விமானம் கட்டும் பயிற்சிப் பாடசாலையில் சேர்ந்தார். இவருடைய கடுமையான உழைப்பாலும், வேகத்தினாலும் ரஷ்ய விமானப்படையில் சேரும் தேர்வில் வெற்றி பெற்றார். சில நாட்களின் பின்னர் ககாரின் விண்வெளிப் பயணத்திற்கான பயிற்சிக்குத் தெரிவானார்.

யூரி ககாரின் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி காலை 9.07 மணிக்கு விண் ஓடமான வொஸ்ரொக் - 1 இல் தனது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தார். ரஷ்யா கசகஸ்தான் விண்வெளி நிலையத்திலிருந்து ஏவப்பட்ட இவரது விண்வெளி ஓடம் பூமியில் இருந்து 340 கி.மீற்றர் உயரத்தில் மணிக்கு 28,090 கி.மீற்றர் என்ற வேகத்தில் பூமியை வலம் வந்தது. இவர் ஒரே ஒரு முறைதான் பூமியை வலம் வந்தார். இவருக்கு பூமியை வலம்வர 89.34 நிமிடங்களே எடுத்தது. இதனால், யூரி ககாரின் முதன்முதலாக விண்வெளியில் பூமியை வலம் வந்ததோடு, அந்த உயரத்தில் பயணம்செய்த முதலாவது மனிதன் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார்.

யூரி ககாரின் அவர்களுக்கு லெனின் விருதும், பொன் நட்சத்திரப் பதக்கமும் வழங்கப்பட்டன. 'சோவியத் யூனியனின் நாயகன்' என்ற கௌரவமும் வழங்கப்பட்டது. யூரி ககாரினது பயணம் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, விண்வெளி அறிவியலில் ஒரு புதிய சகாப்தத்தையே ஆரம்பித்து வைத்தது. விண்வெளி வரலாற்று வரிசையில் யூரி ககாரினின் சாதனை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

இவர் 1968 ஆம் ஆண்டு தனது 34 ஆவது வயதில் ஒரு விமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தொகுப்பு: **ஜுனைட் எம்.பஹ்த்**

# யாழ்ப்பாணம் தேசிய ஜம்போரிக்கு...

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும். சாரணர் இயக்கம் அவ்வவ் நாடுகளில் வாழும் பிள்ளைகளுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. இன்று நாம் பிள்ளைகளுக்கு நல்ல விடயங்களைக் கற்றுக்கொடுக்கும்போது எதிர்காலத்தில் உருவாகும் சமூகம் அமைதியானதும் நாட்டுக்கு நன்மை பயக்கும் சமூகமாகவே உருவெடுக்கும் எனலாம். சாரணர் இயக்கத்தின் திறந்தவெளி செயற்பாடுகளில் ஒன்றான சாரணர் ஜம்போரியினை வடக்கில் நடத்த தீர்மானித்துள்ளமை காலத்திற்கு உகந்த ஒரு தீர்மானமாக அமைவது இதனாலேயே எனலாம். எனவே, இதன் தேசிய முக்கியத்துவத்தினை அரசும், தனியார் துறையும் விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

## தேசிய ஜம்போரியின் தொனிப்பொருள்

'நட்பின் முக்கியத்துவத்தினை உணர்வோம்!' என்பதே யாழ்ப்பாணம் ஜம்போரியின் தொனிப்பொருளாகும். எமது எதிர்கால சந்ததியினர் இனம், மதம், சாதி பேதங்கள் இன்றி உண்மையான நண்பர்களாக வாழ வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. இதனாலேயே இன்றைய காலத்திற்கு பொருத்தமான வகையில் இத்தொனிப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## இவை அனைத்திற்கும் இன்னும் ஆறு மாதங்கள் மட்டுமே

தேசிய சாரணர் ஜம்போரி அடுத்த வருடம் (2016 ஆம் ஆண்டு) பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. ஜம்போரி கிராமம் ஆறு உப முகாம்களைக் கொண்டிருக்கும். ஒரு உப முகாம் வெளிநாட்டு சாரணர்களுக்காக ஒதுக்கப்படும். வெளிநாட்டு சாரணர்கள் சுமார் ஆயிரம் பேர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஜம்போரி செயற்பாட்டு காரியாலயம்

யாழ்ப்பாணம் ஜம்போரிக்கான செயற்பாடுகளை முன்னெடுப் பதற்கென ஜம்போரி காரியாலயங்கள் இரண்டு நிறுவப்பட்டுள்ளன. இதில் ஒன்று எஸ்.தேவரஞ்சனின் கீழ் யாழ்ப்பாணத்திலும், மற்றையது கொழும்பு தேசிய சாரணர் தலைமையகத்திலும் நிறுவப்பட்டுள்ளது.

# அலிபாபாவும் 40 திருடர்களும்

19

கதை, ஓவியம்: வேணு வாரியத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



✱ இலங்கையில் அதிக தடவைகள் பிரதமர் பதவியை ஏற்ற தலைவர் யார்? எத்தனை தடவை?

ரணில் விக்கிரமசிங்க. 4 தடவை

✱ உலக ஓசோன் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?

ஒக்டோபர் 10



✱ ஐக்கிய இராச்சியத்தினால் பரிபாலிக்கப்பட்ட ஹொங்கொங் தீவை எந்த நாட்டிற்கு? எப்போது அந்நாடு கையளித்தது?

1999 இல், சீனாவுக்கு



✱ நோபுரு கசிமா என்ற ஜப்பானியரின் பெயர் எதனால் புகழ்பெற்றுள்ளது?

தமிழ்மொழி அறிஞர் பேராசிரியரான இவருக்கு இந்தியப் பிரதமரால் 'பத்ம ஸ்ரீ' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது

✱ பின்வரும் பெயர்களால் புகழ்பெற்ற மிருகங்கள் எதனால் புகழ்பெற்றன?

i. லைகா - முதன்முதலில் விண்வெளிக்கு சென்ற நாய்

ii. டோலி-முதன்முதலில் குளோனிங்மூலம் உருவாக்கப்பட்ட ஆடு



✱ இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளான ஐ.தே.க (U.N.P), ஸ்ரீ.ல.சு.க. (S.L.F.P) என்பன ஐக்கிய இராச்சியத்தில் உள்ள எந்த அரசியல் கட்சிகளுக்கு சமமான கொள்கை களை கொண்டதாக கருதப்படுகின்றது?

i. ஐ.தே.க - பழைமை பேண் கட்சி (கொன்சவேர்டிவ் கட்சி)

ii. ஸ்ரீ.ல.சு.க. - தொழிற் கட்சி (லேபர் கட்சி)


UNITED NATIONAL PARTY

✱ 'பாத் பைண்டர்' என்ற விண்கலம் எப்போது செவ்வாய்க் கிரகத்தின் தரையில் இறங்கியது?

1997 இல்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

## ஓவியம் வரைவோம்




# பெல்ஜியம்

பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் லக்ஸம்பேர்க் ஆகிய நாடுகளால் சூழப்பட்ட நிலையில் மேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ள நாடே பெல்ஜியமாகும். கி.பி 1830 இல் நெதர்லாந்தின் ஆட்சியில் இருந்து சுதந்திரம் அடைந்தது. அதற்கு முன்னர் இந்நாடு உரோமப் பேரரசின் ஒரு மாகாணமாகவும் திகழ்ந்தது. முதலாம் மற்றும் இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜெர்மனியின் ஆட்சிக்கு அடிபணிந்தது. அரசியலமைப்பு ரீதியிலான முடியாட்சி முறையின் கீழ் செயல்படும் நாடாளுமன்ற ஜனநாயகம் அங்கு நிலவுகின்றது.



பெல்ஜியம் முன்பு கோல் நாடு என அழைக்கப்பட்டது. அந்நாட்டில் வீர தீரமாகப் போர் புரியும் போர்வீரகோல் மக்கள் வாழ்ந்ததாக வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.




உரோமர்களால் கோல் தேசத்தின் வடபகுதி hallia Belfica ஹலியா பெல்ஃபிக்கா என அழைக்கப்பட்டது.



1830 இல் சுதந்திர நாடாக பரிணமித்தது.

நாணயம் யூரோ


### தேசிய மிருகம், பறவை, மலர்

தேசிய மிருகம் - சிங்கம்

தேசிய பறவை - கொமன் கெஸ்ட்ரல் பறவை

தேசிய மலர் - செம் பொபி மலர்

### இனங்கள்




### மொழி

ஒல்லாந்த மொழி (உத்தியோகபூர்வ மொழி) டச் 60%, பிரெஞ்ச் (உத்தியோகபூர்வ மொழி) 40%

ஜெர்மனிய மொழி 01%

### மதம்

உரோமன் கத்தோலிக்கம் 75%

புரட்டஸ்தாந்து உள்ளிட்ட ஏனையோர் 25%

### அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்

பிரதமர் - சார்ள்ஸ் மைக்கல்



### இயற்கை வளம்

கட்டட மூலப்பொருட்கள், சிலிக்கா மணல், கார்பனி நேட்ஸ்

### தலைநகரமும் பெரிய நகரமும்




மன்னன் பிலிப்பே மற்றும் அரசி மெதில்டே ஆகியோர் தற்போது பெல்ஜியத்தை அரசாட்சி புரிகின்றனர்.




நேட்டோ நிறுவனத்தின் முக்கிய அலுவலகம் பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ளது.

பொருளாதாரத்தில் பெரும்பங்காற்றிய நிலக்கரி அகழ்வு 1960 இல் நிறுத்தப்பட்டது.

கிழங்குகள், காய்கறிகளோடு தானியப் பயிர்களும் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இறைச்சிக்காக மாடுகள் வளர்க்கப்படுகின்றன.



பாரம்பரிய பெல்ஜிய உடை.

வருடாந்த கலைநிகழ்ச்சியில் ஓர் அங்கம்.

அணு சக்தி நிலையங்களின் ஊடாக, நாட்டுக்குத் தேவையான மின்வலு கிடைக்கின்றது.

உலோக உற்பத்தியில் புகழ்மிக்க நாடு.

பாரிய இசைக்கலாசாரம் நிலவும் நாடு.

உல்லாசப் பயணிகளின் மனதைக் கவர்ந்த உயர் சுற்றுலாத் தளங்கள் பல உள்ளன.

வைரக்கல் வர்த்தகத்திற்கு பெயர்போன நாடு.உலகின் 'வைரத் தலைநகர்' என்றும் அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றக்பி உலகக் கிண்ணம் அடுத்த மாதம் இங்கிலாந்தில்




கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்டப் போட்டிகளுக்கு அடுத்த படியாக அதிக எண்ணிக்கையிலான உலக ரசிகர்களின் அபிமானம் வென்ற போட்டியாக இருப்பது ரக்பி போட்டிகளாகும். அதற்கமைய கடந்த 18 ஆம் திகதியன்று இங்கிலாந்தில் 8 ஆவது உலகக் கிண்ண றக்பி போட்டிகள் ஆரம்பமாகின.




4 பிரிவுகளின் கீழ் 20 நாடுகள் இம்முறை போட்டிகளில் மோதுகின்றன. இறுதிப் போட்டிகள் ஒக்டோபர் 31 ஆம் திகதி நடைபெறும்.

உலகக் கிண்ண றக்பி போட்டிகள் முதன்முதலாக 1987 ஆம் ஆண்டில் நியூஸிலாந்திலேயே நடைபெற்றது. இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா- நியூஸிலாந்து அணிகள் மோதியதில் நியூஸிலாந்து அணியே முதலாவது வெற்றிக் கிண்ணத்தை சுவிகரித்திருந்தது.

இதற்கமைய 4 வருடங்களுக்கு ஒரு தடவை உலகக் கிண்ண றக்பி போட்டிகள் நடைபெற்று வந்துள்ளன. உலகக் கிண்ண றக்பி போட்டி வரலாற்று பதிவுகளின்படி நோக்குகையில் அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளே அதிகப்படியான சாதனைகளை நிகழ்த்தியுள்ளன. குறிப்பாக 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளைத் தவிர ஏனைய போட்டிகளினூடே நியூஸிலாந்து அணி ஏதோ ஒரு வகையில் முதலாவது இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இடங்களைப் பெற்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அவ்வாறே 1975 மற்றும் 2007 உலகக் கிண்ண போட்டிகளைத் தவிர்த்து ஏனைய அனைத்துப் போட்டிகளிலும் சிறந்த முதல் நான்கு அணிகளுள் ஒரு அணியாக அவுஸ்திரேலியா வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடந்த போட்டிகளில் நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, அணிகள் இரண்டு தடவைகள் செம்பியன் ஆகியுள்ளதுடன், இங்கிலாந்து ஒருதடவை செம்பியன் ஆகியுள்ளது.

இதுவரை ரசிகர்களின் அதிக அபிமானத்தை வென்ற அணியாக இருப்பது நியூஸிலாந்து அணியாகும். அதிக சாதனைகளைக் கொண்ட அணியாகவும் நியூஸிலாந்து அணியே திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணி மே.இ.தீவுகள் விஜயம்

**ஒக்டோபர் மாதம் இலங்கை அணி மேற்கிந்திய தீவுகள் அணியுடனான போட்டித் தொடரில் ஈடுபடவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி 2 டெஸ்ட் போட்டிகள், 2 ஒருநாள் போட்டிகள், 2 டுவென்டி டுவென்டி போட்டிகள் என இரண்டு அணிகளும் மோதவுள்ளன. இதே காலகட்டத்தில் தென்னாபிரிக்கா - இந்தியா அணிகளுக்கிடையேயும் இங்கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயும், பங்களாதேஷ்- அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயும் போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.**






## இயன் பெல் ஓய்வு



இங்கிலாந்தின் கிரிக்கெட் வரலாற்றில் ஆகக்கூடிய ஒருநாள் போட்டி ஓட்டங்களை பெற்றவர் என்ற பெருமைக்குரியவரான இயன் பெல் சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக தெரிய வருகின்றது. 161 ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்டு 5416 ஓட்டங்களைப் பெற்றுள்ள பெல், 2015 இல் முடிவடைந்த 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் எந்தவொரு ஒருநாள் போட்டியிலும் கலந்துகொள்ளவில்லை. இத்தகைய நிலையிலேயே அவர் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் தான் தொடர்ந்தும் டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## உதவி பயிற்றுனராக அவிஷ்க குணவர்தன

**இலங்கையின் 19 வயதிற்கு கீழ் கிரிக்கெட் அணியின் உதவி பயிற்றுனராக முன்னாள் டெஸ்ட் வீரர் அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த வருடம் (2016) பங்களாதேஷில் நடைபெறவுள்ள இளையோர் கிண்ணப் போட்டிகள்வரை அவிஷ்க மேற்படி உதவி பயிற்றுனர் பணியை மேற்கொள்ளவுள்ளார். ஆரம்ப துடுப்பாட்ட வீரராக 6 டெஸ்ட் போட்டிகளிலும், 61 ஒருநாள் போட்டிகளிலும் அவிஷ்க இலங்கை அணி சார்பாக கலந்துகொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.**

## நெடுந்தூர ஓட்டப் போட்டியில் திசைமாறிச் சென்று நீர் பருகிய வீரர் அசத்தல் வெற்றி



சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் 5,000 மீற்றர் நெடுந்தூர ஓட்டப் போட்டிகளில் கலந்துகொண்ட பிரிட்டன் வீரர் மோ◦◦பாரா என்பவர் ஓடுதளத்தில் நீண்டதூரம் ஓடியதுடன் ஒரு கப் தண்ணீரையும் பருகிவிட்டு மீண்டும் சக ஓட்ட வீரர்களுடன் இணைந்துகொண்டு அவர்களையும் தாண்டிச் சென்று முதலாவது இடத்தைத் தட்டிக்கொண்ட சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு இவர் இடைவழியில் நீர் பருகியது மட்டுமல்ல, சக வீரர்களுடன் இணைய ஓடிவருகையில் மிகுதி நீரை தலையில் ஊற்றியவாறு களைப்பையும் நீக்கியவாறே ஓடினார்.

மோ◦◦பாராவின் இந்த விநோதமான செயல் ரசிகர்களையும் போட்டி வர்ணனையாளர்களையும் பெரிதும் கவர்ந்தது. பொதுவாக நெடுந்தூர ஓட்டப் போட்டியின் போது ஓடுதளத்தில் 8 ஓடுதளங்கள் காணப்படும். இவற்றுள் முதலாவது ஓடுதளம்தான் குறுகிய தூரத்தைக் கொண்டிருக்கும். இத்தகைய நிலையில் 8 ஆவது ஓடுதளத்திற்குச் சென்று அங்கு நீரையும் பருகிவிட்டு மீண்டும் 1 ஆவது ஓடுதளத்தை நோக்கி ஓடிவந்தே சக வீரர்களுடன் இவர் இணைந்துகொண்டார். அதன்படி அவர் 5,000 மீற்றர்களுக்கும் அதிக தூரம் ஓடி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மோ◦◦பாரா பிறப்பில் சோமாலிய நாட்டைச் சேர்ந்தவராயினும், இப்போட்டியில் அவர் பிரிட்டன் சார்பாகவே போட்டியிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொய்யா




வெப்ப வலயங்களிலும் துணை வெப்ப வலயங்களிலும் பயிரிடப்படும் ஒரு தாவர இனமே கொய்யா ஆகும். மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, கரீபியன் வலயங்கள் ஆகியவற்றை தாயகமாகக் கொண்ட கொய்யா, ஆசிய நாடுகள் சிலவற்றிலும் ஆபிரிக்க நாடுகளிலும்கூட பயிரிடப்படுகின்றது. கொய்யா மரத்தின் பழம் மட்டுமன்றி, அதன் இலைகள், பட்டைகள் என்பனவும் மனிதனுக்கு பயனளிக்கின்றன. இவை அனைத்தும் மருத்துவக் குணம் மிக்கவை. நமது வீட்டுத் தோட்டத்திலும்கூட பயிரிட்டுப் பயன்பெறக்கூடிய தாவர இனமாக கொய்யா கருதப்படுகின்றது. கொய்யாப் பழத்தில் விற்றமின் B மற்றும் விற்றமின் C ஆகிய சத்துக்கள் அடங்கியுள்ளன. தவிர கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு போன்ற தாதுப்புக்களும் இதில் காணப்படுகின்றன. உலகில் கொய்யா பயிர்ச்செய்கையில் முன்னணி வகிக்கும் நாடுகளாக இந்தியா, சீனா, கென்யா, தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் விளங்குகின்றன.





# மனித மூளையின் நிறை

மனிதனின் குழந்தைப் பருவத்தில் மூளையின் நிறை 340 கிராம். ஆறாவது மாதத்தில் 750 கிராம். ஒரு வயதில் 970 கிராம். இரண்டு வயதில் 1,150 கிராம். மூன்று வயதில் 1,200 கிராம். ஆறு வயதாகும்போது 1,250 கிராம் ஆகவும், ஒன்பதாவது வயதில் 1,300 கிராம் ஆகவும் இருக்கும். பத்து-பன்னிரெண்டு வயதாகும்போது 1,350 கிராம் ஆகக் காணப்படும். மனிதரில் சராசரி வயதுடையவரின் மூளை 1,400 கிராம் நிறை கொண்டதாக இருக்கும்.

# இவ்வார கார்ட்டூன் படம்





# தெருவெங்கும் குடைகள்



போர்த்துக்கல் நாட்டின் Agueda நகரின் சில தெருக்களுக்கு மேலாக பல நூற்றுக்கணக்கான வர்ணக் குடைகள் விரிக்கப்பட்டு தொங்கவிடப்பட்டுள்ளன. பல வர்ணங்களில் ஜொலிக்கும் இந்தக் குடைகள், அந்த தெருக்களில் நடந்து செல்பவர்களுக்கு நிழலையும் குளிர்ச்சியையும் தருபவையாக இருப்பதோடு, பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் காட்சியளிக்கின்றன.

ஜூலை-செப்டெம்பர் வரையான கோடை காலப்பகுதியில் Agueda நகரில் நடைபெறும் 'Agitagueda கலை திருவிழா' வின் ஒரு நிகழ்வாகவே, தெருக்களில் இவ்வாறு பல வர்ணங்களிலான குடைகள் விரித்து தொங்கவிடப்படுகின்றன. இக்காலப்பகுதியில் இங்கு நிலவும் வெப்பத்தை சமாளிப்பதற்கே இந்த வர்ணக் குடைப் பந்தல் போடப்படுகின்றதாம்! தெருக்களில் வர்ணக் குடைகளைத் தொங்கவிடும் இந்த வழக்கம் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, செப்டெம்பர் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 23, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org